மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 30 ★ 24-11-57 சென்னை ★ விலை 16 காசு

"பேசாமலேயே இருந்தார்!"

—(0)—

காங்கிரசுக் கமிட்டியில் காமராசர் நிலை!

—(0)—

இரா. செழியன்

சென்ற வாரத்தில் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது! ஆளுங் கட்சியினர் என்ற முறையில், நாட்டில் நிலவுகின்ற நானாவிதப் பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் ஆராய்ந்திருப்பார்கள், ஆராய்ந்திருக்க வேண்டும்! சிக்கலான பிரச்சினைகள், நெருக்கடியான நிலைமைகள் ஏராளமாக மூண்டு, மிகச் சாமர்த்தியமுள்ள அரசியல் பொருளாதார நிபுணர்களையும் திணறடிக்கும் வகையில், இந்திய துணைக் கண்டத்தில் பல்பல எழுந்துள்ளன! ஒவ்வொரு பிரச்சினையிலும் காங்கிரசுக் காரியக் கமிட்டி எடுக்கின்ற முடிவு இந்த துணைக் கண்டத்தில் இருக்கும் சூழ்நிலையையும் வரும் எதிர்காலத்தையும் பாதிப்பதாக இருப்பதால், காங்கிரசுக் காரியக் கமிட்டியினர் நடத்திய விவாதங்களைப் பற்றியும், எடுத்த முடிவுகளைப் பற்றியும், நாட்டு மக்கள் மிகுந்த அக்கரையுடன் கவனித்து வந்தார்கள்!

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இங்கிருந்து காரியக் கமிட்டியில் உறுப்பினராக இருப்பவர் காமராஜர்! டில்லியில் நடந்த காரியக் கமிட்டிக் கூட்டத்தில் காமராஜர் எந்தெந்தப் பிரச்சினைகளில் என்னென்ன கருத்துக்களை அள்ளியள்ளி வீசினார் என்று பத்திரிக்கையைப் புரட்டிப் பார்த்தால், எதுவுமில்லை! காங்கிரசுப் பத்திரிக்கைகள், காரியக் கமிட்டி நடவடிக்கைகளைப் பற்றிய செய்தியை வெளியிடும் பொழுது, தலைப்பிலேயே "சென்னை முதன் மந்திரி வாய் திறக்கவே இல்லை!" என்று நாட்டை எழுத்துக்களில் போடுகின்றன!

காங்கிரசுக் காரியக் கமிட்டியின் முன், ஏராளமான பிரச்சினைகள் விவாதத்திற்கு வந்தன!

உணவு உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு வரவில்லை! உணவு விலைகள் விசுபோல ஏறியிருக்கின்றன! பல மாநிலங்களில் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது, பஞ்ச நிலைமை சூழ்ந்துள்ளது!

அடுத்தபடியாக இந்தியாவின் பொருளாதார நிலைமை! போட்ட ஐந்தாண்டு திட்டத்தை என்ன செய்வது என்று தெரியவில்லை! அமெரிக்காவிடம் கடன் கேட்கப் போன தட்டைக் கிருஷ்ணமாச்சாரியார் வெறுந் தட்டை நாமத்துடன் திரும்பி வந்துவிட்டார்! இனிமேல் புதுத்திட்டங்களை ஆரம்பிப்பது முடியாது என்றாலும் ஆரம்பித்துவிட்ட திட்டங்களை என்ன செய்வது? அதற்கு வேண்டிய சாமான்களை அந்நிய நாடுகளிடமிருந்து எப்படிப் பெறுவது?

மொழி வழி மாநிலக் கிளர்ச்சிகள் சில இடங்களில் ஓரளவு அடங்கிவிட்ட போதிலும், முன்பிருந்ததைவிட பலமான கிளர்ச்சிகள்—கண்டனங்கள் இந்தி மொழி ஆட்சி மொழியாவதற்கு எதிராக எழுந்துள்ளன! இந்தியல்லாத மற்ற மொழியினர் இந்தி வருவதை எதிர்க்கின்றனர்! ஆட்சி மொழி பற்றி என்ன முடிவெடுப்பது?

உள் நாட்டுப் பிரச்சினைகளில் தான் இவ்வளவு குழப்பமும் சச்சரவும் என்றால், இந்தியாவின் வெளிநாட்டுச் கொள்கையில் காணப்படும் குழப்பத்திற்கும் சச்சரவுக்கும் அளவேயில்லை! இந்தியாவுக்குப் பெரும் தலை வேதனை!

சிக்கலான பிரச்சினைகளும் நெருக்கடியான நிலைமைகளும் காங்கிரசு தலைமைக் குழுவின் பார்வைக்கு வைக்கப்பட்டன! காங்கிரசுக் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் தத்தம் கருத்துக்களையும் யோசனைகளையும் தந்தார்கள்! பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலானதாயிருந்த போதிலும், நாட்டு நிலைமை எவ்வளவு நெருக்கடியானதாக இருந்தாலும், காமராஜர் மட்டும் சளைக்கவில்லை, களைப்படையவில்லை, அவர் "வாய்திறக்கவே இல்லை" என்ற காரணத்தால்!

மற்றப் பிரச்சினைகள் விவாதத்திற்கு வந்த பொழுது காமராஜர் பேசாமலிருந்தால் கூட, தமிழ் நாட்டைப் பொறுத்து வந்த இரண்டு முக்கிய பிரச்சினைகளிலாவது அவர் கலந்து கொள்வார் என்று பத்திரிக்கைக்காரர்கள் எதிர் பார்த்தனர் போலும்! ஆட்சி மொழி பற்றி தமிழ் நாட்டில் ஒன்றுபட்ட கருத்து-இந்தி ஆட்சி மொழியாவதற்குக் கட்டுப்பாடான எதிர்ப்பு இருக்கிறது. ஆக ஆட்சிமொழி பற்றிய பிரச்சினையில் தமது கருத்தென்று சொல்லாவிட்டாலும் தமிழ் நாட்டின் கருத்தென்று இங்குள்ள எதிர்ப்பை அவர் வெளியிட்டிருக்கலாம்! அடுத்த படியாக, திராவிடக் கழக நடவடிக்கைகளைப் பற்றி விவாதம் வந்தது. அங்கிருந்தவர்களில் காமராஜர் ஒருவர்தான் திராவிடக் கழகத்துடன் நல்ல தொடர்புகொண்டு, அதன் கருத்துக்களையும் வேலைத் திட்டங்களையும் நன்கு உணர்ந்தவர். இப்பொழுது கழகத்தின் மீது சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்க முனைந்தவர்! ஆகத் திராவிடக் கழகத்தைப் பற்றிக் கூறவும், அரசாங்கம எடுக்கும் நடவடிக்கைகளைப் பற்றி விளக்கவும் அங்கு இருந்தவர்களில் அவர் ஒருவர் தான் தகுதியானவர்! இருந்தாலும், ஆட்சி மொழி பற்றியும், திராவிடக்கழகம் பற்றியும், விவாதம் உணர்ச்சியாக நடைபெற்ற போது, "ஸ்ரீ காமராஜர் வாய் திறக்கவே இல்லை" எனப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன!

"தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக் காலம்?" எனச் சித்தர்கள் பாடியுள்ளார்கள். அதைப்போல, "பேசாமல் பேசிப் பலன் பெறுவதெக்காலம்?" என தென்னாட்டு அரசியலில் பெரிய காரிய சித்தராக விளங்குகிற கனம் காமராஜர் பேசாத விரதம் பூண்டிருக்கிறாரோ, என்னவோ!

மற்றவர்களெல்லாம் பேசிப் பேசிக் கஷ்டப் பட்ட நேரங்களில் கூட, காமராசர் பேசாமலேயே காரியங்களைச் சாதித்து வந்திருக்கிறார்! கடந்த பொதுத் தேர்தலில் எவ்வளவு அமோகமான வெற்றிகளைக் காங்கிரசுக்கு அவர் வாங்கித் தந்தார்! தேர்தல் என்றால், மற்ற அரசியல் கட்சித் தலைவர்களைப்போல, சூறாவளிப் பயணத்தில், காலையில் ஒரு கூட்டம், நடுப்பகல் ஒரு கூட்டம், மாலையில் ஒரு கூட்டம், இரவு ஒரு கூட்டம் எனப பெரும் பொதுக் கூட்டங்களில் மக்களைக் கூட்டி, கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றி விளக்கங்களைத் தந்து, ஆதரவைத் திரட்டினாரா? இல்லை அந்த வேலையை மற்றக் கட்சியினர் செய்தனர், காங்கிரசு உறுப்பினர்களை ஆதரிக்க ஓடோடியும் முன்வந்த திராவிடக் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் கூட, அந்தப் பழம் முறையிலே தான் கூட்டங்கள் போட்டு காமராஜரும் அவருடைய காங்கிரசும் ஆட்சிப் பீடத்துக்கு வரவேண்டிய அவசியத்தை விளக்கினார்! பட்டி தொட்டிகளிலும் பாதையில்லா ஊர்களிலும், இந்தப் பச்சைத் தமிழர் வரவேண்டுமென பெரியார் எவ்வளவு பிரசாரம் செய்தார்! ஒரே நாளில் எவ்வளவு கூட்டங்களில் பேசினார்! சில சமயங்களில் கூட்டங் கூட்டச் சொல்லி, தமது கழகத்தவர்களுக்குக் கடிதம் எழுதி விட்டுச் சென்றார்! எவ்வளவு அதிகமான கூட்டங்கள் போட்டு எவ்வளவு பேச முடியுமோ அவ்வளவும்செய்து,காமராஜருக்கும் காங்கிரசுக்கும் அவர் ஆதரவு திரட்டினார்! ஆனால் காமராஜரின் "மின்னல்வேக" சுற்றுப்பயனம் வேறு விதத்தில் இருந்தது! மற்றவர்களைப் போலப்பேசுவதில், கொள்கைவிளக்கம் தருவதில் அவர் நேரத்தை வீணாக்கவில்லை; பொதுக்கூட்டங்களில், திரளான மக்களைச் சந்திக்க அவர் சுற்றுப்பயணம் போடவில்லை! ஓய்வு விடுதிகளில் தங்கினார், ஊரிலிருக்கும் கனவான்களை கனம் உள்ளவர்களை வரவழைத்தார், பேச வேண்டியவர்களிடம் ஓரிருவார்த்தைகள் பேசினார்!

(2-ம் பக்கம் பார்க்க)

கங்கைக் கரையிலே!

கங்கை நதி! பரத கண்டத்தைப் புண்ணிய பூமியாக்குவதற்கு முதல் காரணமாக இருப்பது! அந்தப் புனித நதியின் தீர்த்தத்தில் ஒரு துளி பட்டாலும் போதும், அவன் செய்த பாவங்கள், அது எவ்வளவு கடுமையான பாவமாயிருந்தாலும், மாபாதகமாயிருந்தாலும், மனங் கூசும செயலானாலும், ஒரு தடவை அந்த கங்கை நீர் ஒரு கை தலையில் பட்டாலும் போதும், பாவங்களெல்லாம் பரபரவென்று பறந்து விடும். பாபிபுண்ணியவானாவான். நரக லோகம் போக வேண்டியவனுக்கு தேவ உலகத்தில் இடம் கிடைக்கும்! தனலில் அவதிப்பட வேண்டியவன் நெருப்புக் கொப்பரையில் துடிக்கவேண்டியவன், இந்திராபுரியின் அருகே, கற்பக மரத்தினடியில் பாரிஜாத மலரை எடுத்து மேனகை வீச, ஊர்வசியும் ரம்பையும் ஆடிட, திலோத்தமை பாட, தேவ மாதர்கள் சுற்றிலுமிருந்து பணிவிடை செய்யும் படியான நிலைக்குப் போய்விடுவான், கங்காதீர்த்தத்தில் ஒருதடவை மூழ்கியிருந்தால்! இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல, இதற்கு முன்னதாக எவ்வளவோ ஜன்மங்களில் செய்த பாவங்கள் கூட, கங்கையில் அப்படியேக் கரைந்துபோய் விடும்!

போகிற கதிக்கு நல்ல கதி வேண்டுமானால் கங்கையில் ஒரு தடவை மூழ்கி எழுந்தால் போதும்! இதை வேத காலத்தில்மட்டுமல்ல, இன்று கூட பல கோடிக் கணக்கில் மக்கள் நம்பி கங்கைக்குச் சென்று நீராடுகிறார்கள்! எப்படியாவது கங்கா தீர்த்தத்தில் ஒரு சொட்டு தலையில் விழுந்தால், இந்த ஜென்மத்தில் சாபல்யம் உண்டு எனப் பலர் இன்னும் நம்புகிறார்கள்! உயிருடன் இருக்கும்பொழுது கங்கா தீர்த்தம் மேல்படும் வாய்ப்பு கிடைக்காவிட்டாலுங்கூட, இறந்தபின்பாவது எலும்பைக் கொண்டுபோய் கங்கையில் போட்டால் போதும் எனப் பலர் நம்புகிறார்கள்! ஆக இருக்கும் பொழுது பக்கத்தூருக்குக் கூடப் போக வசதியில்லாதவர்கள் செத்ததும், எலும்பைக் கங்கையில் போட ஏற்பாடு செய்யப்பட்டு விடுகிறது!

கங்கா தீர்த்தமென்றால் அவ்வளவு மகிமை! இந்து மதத்தில் கூறப்படுகிற எல்லாப் பாபங்களுக்கும், ஒரே கழுவாய், கங்கா தீர்த்தம்தான்! சர்வரோக நிவாரணி, சர்வபாப நாசனி!

கங்கா தீர்த்தமென்றால் சாமன்யமானதல்ல! இந்தப் பூவுலகிலுள்ள மற்ற தீர்த்தங்களில் எல்லாம் மூன்றரைக் கோடி தடவைகள் மூழ்குவதும் சரி, கங்கையில் ஒருதடவை நீராடுவதும் சரியாம்!

கங்கா தீர்த்தத்தின் மகிமையைப்பற்றி இப்பொழுது ஏன் இவ்வளவு விரிவாகக் கவனிக்கிறாய் என்றால் கங்கைக்குப் போவதற்கு யாரையும் தூண்டுவதற்காக அல்ல, புராண காலத்திலும் புராண காலத்திலிருந்து இன்னும் விடுபடாத நம் காலத்தவர்களிடமும் கங்கைக்கு உள்ள மகிமையைக் குறிப்பிடவேதான்! கங்கா தீர்த்தத்துக்கு அவ்வளவு மகிமையுண்டா, நமக்குத் தெரியாது! இல்லை, முன் காலத்தில் அவ்வளவு மகிமைகளுடன் இருந்த கங்கை, இந்தக் கலிகாலத்தில் மகிமையற்றுப் போயிற்றா, அதுவும் நமக்குத் தெரியாது!

கங்கையில் ஒரு தடவை நீராடினால்கூடப் போதும், ஏழேழு ஜன்மங்களில் செய்த பாவங்களும் பறந்து விடும் என்று சொல்கிறார்கள்! அது கூட வேண்டாம். காங்கா தீர்த்தத்தில் ஒரு சொட்டுப் பட்டால் போதும் சகல பாவங்களும் கரைந்துவிடும் எனப் புராணங்கள் கூறுகின்றன! சரி, ஒரு சொட்டுத் தீர்த்தம் மட்டுமல்ல, ஒரு நாள் நீராடுவது மட்டுமல்ல, வாழ்நாள் முழுவதும் அந்தக் கங்கைக் கரையில் இருந்து, நாள்தோறும் கங்கையிலேயே நீராடி, கங்கைத் தண்ணீரை அருந்தி, கங்கைநீர் பாய்ந்து பயிரான நெல்லை எடுத்து அதிலிருந்து வருகிற அரிசியைச் சாப்பிட்டு. கங்கைக் கரைக் காய்கறிகளையே உண்டு —இவ்வாறு கங்கா தீர்த்தத்திலேயே ஊறி வளர்ந்தவர்கள் எவ்வளவு புண்ணியவான்களாக இருக்க வேண்டும்! பாவச் செயல்கள், பாவ எண்ணங்கள் இவையெல்லாம் நீங்கி, அப்படியே தேவ சொருபமாக, தர்ம மூர்த்திகளாக, அவர்கள் இருக்கவேண்டும்! ஒருநாள் இரண்டு நாட்கள் அல்ல, பல ஆண்டுகள் நீராடி; நீராடி, அவர்கள் பெற்ற "புண்ணிய கதி" வேறெவருக்கும் கிடைக்கமுடியாத அளவு அதிகமாயிருக்கவேண்டும்! ஆனால் இப்பொழுது கங்கைக் கரையில் இருப்பவர்கள் அப்படிப்பட்ட புண்ணியவான்களாக, தர்ம மூர்த்திகளாக, சாந்த சொருபிகளாக இருப்பதாகத் தெரியவில்லை!

கங்கைக் கரையில் நடைபெற்ற சம்பவம் ஒன்று பத்திரிக்கையில் வெளி வந்துள்ளது.

கங்கைக் கரையில் பாட்னா மாவட்டத்தில் பைகாட்பூர் என்ற சிற்றூர் இருக்கிறது. அந்த ஊரில் கங்கை யாற்றுக்குப் பக்கத்தில் சிறிய நிலம் தரிசாகக் கிடந்தது. அந்த நிலத்தை அந்தச் சிற்றூரில் ஒரு பிரிவினர் வாங்கினார்கள்.

இந்தச் சிற்றூருக்குப் பக்கத்திலிருந்த மற்றொரு சிற்றூரைச் சேர்ந்தவர்கள், இதை எதிர்த்தார்கள். இரண்டு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் பூசல் அதிகமாகி, சண்டை மூண்டது. கம்பு, கத்தி, கனமான ஆயுதங்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன!

இருபிரிவினருக்கு மிடையில் கங்கைக் கரையில் பட்டப் பகலில் நடந்த சண்டையில், 9 பேர்கள் கொல்லப்பட்டார்கள்! 15 பேர்கள் படுகாயத்துக்கு ஆளானார்கள்! செய்கிற கொலையைச் செய்து விட்டுப் பின்னால் கங்கையில் பாவத்தைக் கழுவி விடலாம் என்று நினைத்தார்களோ என்னவோ, கொலை செய்ய இரு தரப்பிலும் பின் வாங்கவில்லை! கொலை செய்ததும் பிணங்களை தாறுமாறாக்கி, கங்கையில் வீசி யெறிந்து விட்டார்கள்! எலும்பைக் கங்கையில் போட்டால் கூடப் போதாது என்று ஆட்களையே தூக்கி கங்கையில் வீசினார்கள்!

சண்டையில் தாக்குப் பிடிக்க முடியாமல், கங்கையில் குதித்து, அக்கரை போய்ச் சேர நீந்திக் சென்றவர்களையும் துரத்திப்பிடித்து, சித்ரவதை செய்திருக்கிறார்கள்! அத்துடன் கரையேறி, மற்ற பகுதியிலிருந்தவர்களின் குடிசைகளைக் கொளுத்தி விட்டார்கள்!

கலவரமும் கொள்ளையும் கொலைகளும் நடந்தது அறிந்து போலிசார் அந்தப் பகுதியில் சென்று முகாமிட்டுள்ளனராம்! போலிசின் பலத்த பாதுகாப்பில் இன்றைக்கு அங்கு அமைதி நிலவுகிறது!

மற்ற இடங்களில் நிகழ்ந்தாலாவது பாபம், பாபகாரியம், பாபாத்மாக்களின் தீய செயல்கள் என்று ஒதுக்கி விடலாம்! ஆனால் இவ்வளவு கொலைகளும் கொள்ளைகளும் குடிசைகளை அழித்தலும், கங்கைக் கரையில் நடந்திருக்கின்றன! தப்பிச் சென்றவர்களைப் பிடித்து, வெட்டி, கங்கை யாற்றிலேயே விட்டிருக்கிறார்கள்! கங்கா தீர்த்தம் அந்த இடத்தில் அன்றைய தினம் இரத்தமாக ஓடியிருக்கும்!

தீர்த்தம் பட்டாலே பாபாத்மா புண்ணியவானாக ஆகிவிடுவான் எனப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன! ஏனோ, அந்தப் புண்ணிய நதியின் கரையிலேயேபிறந்து,புண்ணிய தீர்த்தத்திலேயே வளர்ந்தவர்கள் மட்டும் இன்னும் பாபாத்மாக்களாக விட்டுவைக்கப்பட்டுள்ளனர்? கொலை செய்தல், குடிசை கொளுத்துதல், குற்றுயிராக இருப்பவர்களை ஆற்றிலே வீசியெறிதல் போன்ற பாப எண்ணங்கள் கங்கை யாற்றில் நிற்கும்பொழுது கூடவா ஏற்படுவது?

கங்கைக் கரையில் மட்டுமல்ல, புண்ணிய தீர்த்தமென்று கூறப்படும் பல இடங்களில் கொடும் செயல்களும் கோரக் கொலைகளும் நடைபெறுகின்றன! பாபச் செயல்களை -பாப எண்ணங்களை, வெறும் ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு, மகிமைத் தீர்த்தங்களைக்கொண்டு கழுவி விட முடியாது! மக்கள் உள்ளத்தில் மனிதாபிமானத்தை வளர்த்து, பகுத்தறிவு முறையில் நல்லறிவு தரப்பட்டாலன்றி, வேறு வகையில் உண்டாக்கப்படுகிற ஒழுங்கும் அமைதியும் நெடுநாள் நன்றாக இருப்பதில்லை! ○

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசாத முறையில் பேசினார். சிலருக்குப் புன்னகை மட்டும் சிலருக்கு முதுகில் ஒரு தட்டு! சிலருக்குக் காரில் பக்கத்தில் வர அனுமதி! சிலருக்குப் "பார்க்கலாம்!" என்ற அருள்! எப்படியோ, மற்றவர்கள் பேசிப் பேசி கொண்டு வராத தேர்தல் இந்தக் காரியச் சித்தர் பொது மக்களைப் பார்த்துப் பேசாமலேயே கொண்டு வந்தார்,

பேசாமலிருந்தே தமக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் அவர் திறமைசாலிதான்! ஆகையால் அவர் பேசாமலிருந்தால் கூடப் பாதகமில்லை, எப்படியாவது காரியம் நிறைவேறினால் போதும் என நம்பிக்கையோடிருக்கலாம்! ஆனால் ஒன்றை மறந்து விடக் கூடாது பேசாமலிருந்தே **தமக்கு வேண்டியதைச்** சாதித்துக் கொள்வதில் அவர் திறமைசாலி! ஆக, முதலில் இந்தக் காரியங்கள் – ஆட்சி மொழி, திராவிடக் கழகம் இவைகள் "தமக்கு வேண்டிய" என அவர் நினைத்தால் தான், அவர் ஏதாவது செய்வார்!

சென்னை முதன் மந்திரி பேசாமலேயே இருந்து விட்ட காரணத்தால் தான், தமிழ் நாட்டுக்கு வந்திருக்க வேண்டிய தேவி குளம் பீர்மேடு போயிற்று! செங்கோட்டையில் பாதி போயிற்று! இன்னும் சில உரிமைப் பகுதிகள் போயின,

சென்னை முதன் மந்திரி பேசாமலேயே இருக்கிற காரணத்தால் தான், தமிழ் நாட்டுக்குத் "தமிழ் நாடு" என்ற பெயரைத் தர டில்லி அதிக்கம் மறுக்கிறது!

அதைப்போலவே காமராஜர் பேசாமலேயே இருக்கிற காரணத்தால், இந்தி ஆதிக்கத்துக்குத் தென்னாடு அடிமையாக்கப் பட்டு விடலாம்! இங்கு எதேச் சாதிகாரச் சட்டங்கள் வளர்ந்து, அடக்கு முறை ஆட்சி உருவாகலாம்!

காமராஜர் "பேசாமலேயே" இருப்பதால் வடநாட்டினர் தென்னாட்டை அடிமைப் படுத்தும் வேலைகளை சிரமமின்றி, அமைதியாக, "பேசாமலேயே" செய்து கொண்டு வருகின்றனர்! ○

மன்றம்

ஞாயிறு 24—11—57 சென்னை

தகுதியற்ற இந்தி!

இந்தி மொழியை இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரப்பிட—இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால், இந்தி ஆதிக்கத்தின் கீழ் இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் கொண்டுவர, பலமான முயற்சிகள் செய்யப்படுகின்றன!

இந்தியாவின் பொதுமொழியாக இந்தியைக் கொண்டுவரக் காங்கிரசு இயக்கம் பாடுபட்டது!

அடுத்தபடியாக இந்திதான் இந்தியாவின் தேசிய மொழியாக ஆக்கப்படவேண்டுமென காங்கிரசு அறிவித்தது!

கடைசியாக இந்தியாவின் அரசாங்க மொழியாக இந்தி வரவேண்டுமென காங்கிரசு இயக்கத்தினர் அரசியல் சட்டத்தில் எழுதிவைத்தனர்!

இவ்வாறு, இந்தியாவின் பொதுமொழி, இந்தியாவின் தேசிய மொழி, இந்தியாவின் அரசாங்க மொழி என இந்திப் பிரியர்களின் மானசீக உலகில் இந்தியின் இடம் உயர்ந்துகொண்டே சென்றது!

இந்தி மொழியல்லாதவர்களிடை இந்தியைப் பரப்ப, அந்த மொழிக்கு இல்லாத அருமை பெருமைகளையெல்லாம் சொன்னார்கள்! இந்திப் பிரசார சபைகள் நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டன! மக்களின் வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்கில் எடுக்கப்பட்டு, இந்தியைப் பரப்பச் செலவழிக்கப்பட்டது! இந்தியை அரசாங்க மொழியாக்க, இந்திய அரசியல் சட்டமும் சாட்சியாக அழைக்கப்படுகிறது! டில்லி ஆதிக்கத்தின் அதிகார பலம், பண பலம், அரசியல் சட்ட பலம், பாராளுமன்ற பெரும்பான்மை பலம், எல்லாம் இந்திக்குத் துணையாகக் கொண்டுவரப்பட்டன! இத்துடன் இந்தி வெறியர்களின் ஆவேசமும் தூண்டுகோலாக இருந்தது!

இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் இந்திமயமாக்க வேண்டுமென இந்திப் பிரியர்களும் வெறியர்களும் துடிதுடித்தபோதிலும், இந்திக்கு வேண்டுமளவு அருமை பெருமைகளைக் கற்பித்தபோதிலும், இந்திக்கு அந்தத் தகுதி இருப்பதாகத் தெரியவில்லை!

பிறந்த இடத்துப் பெருமையை உடன்பிறந்தானுடன் சொல்லக்கூடாது என்றோர் முதுமொழி உண்டு! வெளியிடங்களில் இந்தியைப்பற்றி பெருமை பேசப்பட்டபோதிலும், அது வழங்குவதாகக் கூறப்படுகிற இடத்திலேயே இந்தியின் தகுதியை ஏற்றுக்கொள்வார் இல்லை!

இந்தி வழங்கும் மாநிலங்களில் ஒன்றாகக் கூறப்படும் பீகார் மாநிலத்தில், ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியைக் கொண்டுவரவேண்டுமென்ற முயற்சி ஒத்திப்போடப்பட்டுவிட்டது! 1959 நவம்பர் மாதத்துக்குள் இந்தியை அந்த மாநில நிர்வாக மொழியாக்கவேண்டுமென, பீகார் சட்டசபை முன்பு தீர்மானித்திருந்தது! இப்பொழுது மேலும் மூன்றாண்டுகள் ஒத்திப்போட வேண்டுமென அரசாங்கம் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளனர்! அதற்கு முதன்மந்திரி தெரிவித்த காரணம், ''ஆட்சி மொழியாகும் தகுதியை இந்தி இன்னும் பெறவில்லை'' என்பதுதான்!

இந்தி வழங்கும் இடமாகக் கணக்கெடுக்கப்படுகிறது, அங்கிருப்பவர்கள் 100க்கு 100 இந்தி பேசுபவர்களாகக் குறிக்கப்படுகின்றனர், அந்த சட்டசபையில் இருப்பவர்கள் இந்திக்கு வேண்டியவர்கள், அரசாங்க மொழியாக இந்தி வரவேண்டும் என்பதை வலியுறுத்தும் காங்கிரசுக்காரர்களே அங்கு ஆட்சிப்பீடத்திலிருக்கின்றனர்! இருந்தாலும், அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியாக இந்தியைக் கொண்டுவர அவர்கள் தயாராக இல்லை! ஊருக்கெல்லாம் உபதேசம் புரிந்தாலும், தங்களுடைய மாநில ஆட்சிமொழி என்று வரும்பொழுது இந்தியை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை!

இந்தி தெரிந்த இடத்திலேயே ஆட்சிமொழியாகும் நிலையில் இந்தி இல்லையென்றால், மற்ற மாநிலங்களில் அதிலும் இந்தி மொழியுடன் எந்தவிதத்திலும் தொடர்பில்லாத மொழிபேசுபவர்களின் மாநிலங்களில் இந்தி எப்படி வரமுடியும்? வரவேண்டும் என்று கூறுவதில் என்ன நியாயமிருக்கமுடியும்?

பீகார் மாநிலத்தில் இந்தி ஆட்சி மொழியாவதற்குத் தடை இருந்தால், மொழியாலும் வழியாலும், வரலாற்றாலும் பண்பாலும், இந்தியுடன் முற்றிலும் மாறுபட்ட தென்னாட்டுக் குழுமொழியினர் இந்தி மொழியை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?

இந்தி வழங்கும் மாநிலம் ஒன்றிலேயே ஆட்சிமொழியாகும் தகுதியை இந்தி இன்னும் பெறவில்லையென்றால், இன்னும் இரண்டாண்டு அல்லது மூன்றாண்டுக் காலத்திற்குள் அவர்களுக்கு அது எப்படி தகுதியுடையதாகுமோ தெரியவில்லை! இவற்றையெல்லாம்விட, ஆட்சிமொழியாக-வெளியுலகத் தொடர்புமொழியாக எல்லாத் தகுதிகளுடன் தற்பொழுது இருக்கும் ஆங்கிலத்தை ஒதுக்கிவைத்து, தகுதியில்லா இந்தியைக் கொண்டுவர என்ன அவசியம் ஏற்பட்டுவிட்டது என்றும் தெரியவில்லை!

தென்னாட்டைப் பொறுத்தவரை, ஆங்கிலம், இந்தி இரண்டும் அந்நியமொழிகள்தாம். இரண்டு மொழியினுள், தற்பொழுதுள்ள நிலையில் உலகிலுள்ள மற்ற நாடுகளுடன் தொடர்புகொள்ளவும், விஞ்ஞான தொழில் நுட்ப அறிவைப் பெறவும் ஆங்கிலம் மிக ஏற்புடைத்ததாக இருக்கிறது. எனவே உள்நாட்டு அலுவலகங்களுக்குத் தாய்மொழியும், வெளியுலகத் தொடர்புகொள்ள ஆங்கிலமும் போதுமானது என நாம் கருதுகிறோம்.

இந்திபற்றி நாம் எழுப்பும் கண்டனம் தனிப்பட்ட முறையில் இந்திக்கு எதிராக உண்டானதல்ல! மற்ற மொழிகளைப்போல, உத்தரப் பிரதேசத்திலோ, மத்தியப் பிரதேசத்திலோ இந்தி மாநில ஆட்சிமொழியாவதை நாம் வெறுக்கவில்லை! அந்த மொழி வழங்கும் இடத்தில் அது வளர்வதைப்பற்றியோ வாழ்வதைப்பற்றியோ நமக்கு எந்த எதிர்ப்பு எண்ணமும் கிடையாது! தமிழ்நாட்டில் தமிழ் வளர நாம் பாடுபடுவதுபோல, தத்தம் பகுதிகளில் தமது தாய்மொழியை வளர்க்க அவர்கள் பாடுபடுவதை யாரும் கண்டிக்க முடியாது! நமது கண்டனமெல்லாம், அந்த இந்தியை அவர்கள் எல்லையைத்தாண்டி, நம்மீது திணிக்க முயல்வதற்குத்தான்! உத்தரபிரதேசத்தில், மத்தியப் பிரதேசத்தில் இந்தி வாழ்வதற்கு யாரும் தடைசொல்லவில்லை! ஆனால் மற்றமொழிகள்மீது, குறிப்பாகத் தென்னாட்டுத் திராவிடக் குழுமொழிகள்மீது, இந்தி ஒரு ஆட்சிமொழியாக ஆதிக்க வெறியுடன் வருவதை நாம் எதிர்க்கிறோம், முழுமூச்சுடன் எதிர்க்கிறோம்! அந்த ஆதிக்க வெறியை முறியடிக்க, எங்கள் உரிமைகளைக் காப்பாற்ற எத்தகைய பலிகள் தரவேண்டுமென்றாலும் அவைகளுக்கெல்லாம் நாம் தயாராக இருக்கிறோம்! இந்தி எப்படி வந்தாலும், எந்த விதத்தில் வந்தாலும், எங்களுக்கு அது தேவையில்லை என எதிர்க்கிறோம்!

வீழ்க ஆதிக்கம்! வாழ்க தாயகம்!

இலக்கிய மறுமலர்ச்சி!

★ ——(o)——

பன்மொழிப் புலவர் ஆற்றிய பெரும் பணி!

17—11—57ம் நாள் சென்னை மைலாப்பூரில் நடைபெற்ற பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் பொன்விழா நிதிக்கான சிறப்புக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

அவைத்தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! அன்பு கெழுமிய தோழர்களே!

இன்று இங்கு நடைபெறும் இச்சிறப்புக் கூட்டம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் 45-வது வட்டக் கிளைக்கழகத்தினரால், பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் பொன்விழா நிதிக்கு உதவும் பொருட்டு இங்கே கூட்டப்பட்டிருக்கிறதென்பதை, நீங்களனைவரும் நன்கு உணர்ந்து அதற்கு நல்லாதரவு தரவேண்டுமென்ற பெருநோக்கோடு இங்கே குழுமியிருக்கின்றீர்கள். இந்தச் சிறப்புக் கூட்டத்தினுடைய முக்கிய நோக்கத்தை, முதலிலே பேசிய நண்பர்கள் மிக விளக்கமாக உங்களிடத்திலே எடுத்துக் கூறினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலே நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு, இலக்கியத்துறையிலே இருந்து உயர்ந்ததொரு பெரும புலவராகப் பணியாற்றி வருபவரும், பலமொழிகளைப் படித்துத்தேர்ந்து, அதிலிருக்கின்ற கருத்துக்களையெல்லாம் திரட்டி நாட்டு மக்களுக்கு—தமிழகமக்களுக்குப் பயன்படுகின்றவகையிலே ஊட்டி வருபவருமான பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களை, அவர்களுடைய ஐம்பதாவது ஆண்டுநிறைவு விழாவிலே போற்றவும், அவரைப் பாராட்டவும், அவருக்குவாழ்த்துக்கூறவும், அவரது வாழ்க்கையிலே இருக்கின்ற வாட்டத்தினையும் வருத்தத்தினையும் நீக்கவும், வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தரவும், வறுமை போக்கவும், அவருடைய பணி இடையீடின்றி தொடர்ந்து நடைபெறவுமான முறையிலே குழு ஒன்று அமைத்துப் பொன்விழாவை மிகச்சிறப்பான முறையிலே அமைப்பதற்காகத்தான் நண்பர்கள் இந்தச் சிறப்புக் கூட்டத்தை இங்கே கூட்டியிருக்கின்றார்கள்.

இதிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற அத்தையதொரு பெருந்தொகை பன்மொழிப் புலவர் அவர்களின்பொன்விழா நிதியிலே சேரும். நீங்களனைவரும் இத்தகைய நல்ல முறையில் இங்கு குழுமி இருப்பதைக் கொண்டே உங்களது நல்லாதரவு பன்மொழிப் புலவர் அவர்களின் பொன்விழா நிதிக்குச் சேரும் என்பதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளுகிறோம். உங்களனைவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சிறு துளி பெருவெள்ளம் என்பதற்கொப்ப நாமெல்லாம் அளிக்கின்றதை இந்தச் சிறு சிறு தொகைகள் அவரதுவாழ்வுக்கு வாட்டம் அளிக்காத வகையிலே-அவர் ஆற்றிவரும் அரும் பணிக்கு ஆக்கமும்-ஊக்கமும் அளிக்கின்ற தன்மையிலேதான் நண்பர்கள் இந்த சிறப்புக் கூட்டத்தை இங்கே—அதுவும் திருமயிலையிலே அமைத்துத் தந்திருக்கிறார்கள். திருமயிலை: எலும்பைப் பெண்ணுருவாகக் கண்ட திருமயிலை! இப்போதோ பெண்களெல்லாம் எலும்புருவாக மாறிக்கொண்டு வருகின்றார்கள்! அத்தகைய மயிலையில் அதுவும் அப்பாதுரை அவர்களின் பொன்விழா நிதிக்கு உதவ நண்பர்கள் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். ஆகவே அத்தகைய நமது நண்பர்கள் அனைவரையும் நான் போற்றவும் பாராட்டவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

பன்மொழிப்புலவர் அப்பாதுரையாரவர்களுக்கு நிதியளிப்பதால் நீங்களெல்லாம் சிறு சிறு தொகைகளாகத் தந்திருப்பதாவது

> வாங்குங்கவளத்து ஒரு
> சிறிது வாய்தப்பின்
> தூங்குங் களிறோ துயருறா—
> ஆங்கு அது கொண்டு
> ஊரும் எறும்பு ஒரு கோடி
> உய்யுமால்
> ஆயுங் கிளையோ டைந்து

வாங்குகின்ற பெருங் கவளத்திலே ஒரு கவளம் தப்பிவிட்டால் அதன் காரணமாக யானை வருந்துவதில்லை. ஆனால் அவ்வாறு தப்பிவிட்ட கவளத்தினைக் கொண்டு ஒரு கோடி எறும்புகள் வாழுதற்கியல்பாகுமென்று ஒரு புலவர் பாடினார்- அதேபோல், இந்த நிதியளிப்பிலே சேர்த்துள்ள சிறு சிறு தொகையினால் நாம் பாதிக்கப்பட்டுவிடமாட்டோம். அது கொண்டு அப்பாதுரையாரவர்களின் ஆக்கம்நிறை பணிகள் சிறக்கவும், செழிக்கவும் ஏற்புடைத்தாய் இருக்குமென்பதனைக் கொண்டு இங்கு இக்கூட்டத்தை ஆக்கித் தந்திருப்பது போற்றற்குரிய தொன்றாகும்.

நண்பர் அப்பாதுரையாரவர்கள் இலக்கியத்துக்கும் இயக்கத்துக்கும் ஆக்கந்தருகின்ற வகையிலே அரும்பணியாற்றி வந்திருக்கிறார்கள். இலக்கியத்திற்கும் இயக்கத்திற்கும் ஏற்றந்தருகின்ற முறையிலே 150 நூல்களுக்குமேல் அவர்கள் எழுதித் தந்திருக்கிறார்கள்.

பகுத்தறிவு இயக்கம் நாட்டிலே பரவவேண்டுமென்ற எண்ணத்தோடு இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் பகுத்தறிவு இயக்கத்தை நாட்டிலே பரவச்செய்ய வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு நமது நேரம், நினைப்பு உழைப்பு அறிவு ஆற்றல் அத்துணையும் நல்ல முறையிலே நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்கின்ற முறையில் பணியாற்றிவந்தபோது அதிகமான எதிர்ப்பு எங்கிருந்து வந்ததென்றால் புலவர்களிடையேயிருந்துதான். பகுத்தறிவியக்கத்தின் கோட்பாடுகளை எதிர்த்தவர்கள் புரோகிதர்கள் தான்—வைதீகர்கள் தான்—வித்வான்கள் தான். புராணிகர்கள் தான்.

அத்தகைய நேரத்தில் சுவடி ஏந்திக் கொண்டிருந்தவர்களெல்லாம் பகுத்தறிவு இயக்கத்தைக் கண்ட கண்ட இடங்களிலிருந்தெல்லாம் எதிர்க்கத் தலைப்பட்டார்கள் இவர்களுக்கெல்லாம் என்ன தெரியுமென்று கேட்டார்கள். இவர்கள் பெரிய புராணத்தின் பெருமையை பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டக் கூற அறிவார்களா என்று கேட்டார்கள்.

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்கின்ற இத்தகைய முறையிலே பாமர மக்களிடையே கூறிவந்தார்கள். ஏதுமறியாத நிலைமையடைந்திருந்த பாமர மக்களும் பகுத்தறிவு இயக்கத்தை எதிர்க்கத் தலைப்பட்டார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே கா. அப்பாதுரையார் போன்றவர்கள்தான் இலக்கியத்துறையின் சார்பாக நின்று - புராணக் கருத்துக்களுக்கும் இலக்கியக் கருத்துக்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும் எடுத்துக் காட்டி—புராணக்கருத்துக்களும் மற்றக் கருத்துக்களும் தமிழகத்தின் பண்புக்கு முரண்பட்டிருப்பதை எடுத்து விளக்கினார்கள்.

அதன் மூலம் பகுத்தறிவுக் கேடயங்கொண்டு அவர்கள் விடும் கணைகளைத் தாங்கி மறுத்து வந்தார்கள். அதற்குப்பிறகுதான் இன்றுநாம்விடுகின்ற கருத்து விளக்கங்களைனும் கணைகளுக்காற்றுமல் அவர்கள் கேடயங்களைக் கீழே போட்டுவிட்டு ஓடுகின்றார்கள் என்கின்ற அத்தகைய நிலைமைகளை நாம் பார்க்கிறோம். இத்தகையநிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் கா. அப்பாதுரையார் போன்றுள்ள புலவர் பெருமக்களேயாவார்கள். அதற்குமுன்பெல்லாம் பார்ப்போமேயானல் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நம்மை எதிர்ப்போராகவே இருந்தார்கள். அந்த நிலையிலேதான் கா. அப்பாதுரையார் போன்ற புலவர் பெருமக்கள் மக்களிடையே தொல்காப்பியங்களையும் திருக்குறளையும் வேறு பல இலக்கியங்களையும்- பத்துப்பாட்டையும் - பதிற்றுப்பத்தையும்- சிலப்பதிகாரத்தையும்-மணிமேகலையையும் மக்களிடத்திலே எடுத்து வைத்துக் கருத்து விளக்கம் தந்தார்கள்.

இருபது முப்பது ஆண்டுகட்கு முன்னால் நீங்கள் பார்ப்பீர்களேயானல் புலவர்களிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நம்மை எதிர்ப்போர்களாயிருந்தார்கள். ஆனால் இன்று இந்த 1957ல் நூற்றுக்குத் தொண்ணூறு தமிழ்ப் புலவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம். இத்தகையநிலைமைகள் நாட்டிலே ஏற்படுவதற்குக்காரணம் கா. அப்பாத்துரையாரும அவர்போன்ற புலவர்களும் நாட்டுமக்களிடையே நமது கழகக் கருத்துக்களை எடுத்துரைத்து நாட்டு மக்களிடையே அவர்கள் காட்டாதிருந்த இலக்கியக் கருத்துக்களை எடுத்துவைத்துப் போராடிய பிறகுதான் கழகக் கருத்துக்கள் மிகப் பொலிவோடும் வலிவோடும் மக்களிடையே பரவத் தலைப்பட்டது.

இன்று நாம் தமிழ்ப் புலவர்களைப் பாராட்டுகிறோமென்றால் தமிழ்ப் புலவர்களைப் பாராட்டும்போது தமிழையும்-தமிழுடன் தமிழகத்தையும் பாராட்டுகிறோமென்பதேயாகும். அத்துடன் தமிழகம் வாழ்ந்திருந்த நிலைமையும் அது வீழ்ந்துபட்ட தன்மையையும் சீர்தூக்கிப் பார்க்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் பழமைக்கு வளையாதீர்கள் பணியாதீர்கள் பழமையைப் பாருங்கள் என்று கூறிய பிறகுதான், அதற்கொப்ப பழமைக்கு வளையாமலும் நெளியாமலும் பணியாமலும் பழமையைத் திரும்பித் திரும்பிப் பார்த்து அதிலுள்ள மூடப் பழக்க வழக்கங்களையும் பிறவற்றையும் எடுத்துக் காட்டி இலக்கியங்களிலுள்ள

(10-ம் பக்கம் பார்க்க)

ஆளுங் கட்சியினரின் அச்சம்!

தேசத் துரோகத்துக்குப் பயந்து உண்மையை மறைக்கின்றனர்!

—(0)—

ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். கதைகளில் வழக்கமாக வருகிற ஒரு முட்டாள் அரசன் அவன்! முட்டாள்தனமாக அவன் இருந்ததால் எல்லோரும் அவனை வெகு சுலபத்தில் ஏமாற்றிவந்தார்கள். புகழ்ச்சியாக யாராவது சொன்னால் போதும், அரசன் அதை அப்படியே நம்பிவிடுவான்! யாரும் அதைப் பிறகு மாற்றமுடியாது.

ஒருசமயம் அந்த அரசனுடைய அரண்மனைக்கு இரண்டு எத்தர்கள் வந்தார்கள். அரசன் இருக்கிற முட்டாள்தனத்தைப் பார்த்ததும், மிக நல்ல இடத்துக்குத்தான் வந்திருக்கிறோம் என்று அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் அரசன்முன் போய் நின்றார்கள்.

"நீங்கள் யார்?" என்று அரசன் கேட்டான்.

"நாங்கள் தேச சஞ்சாரம் செய்து வந்திருக்கிறோம். ஐம்பத்தாறு தேசத்து "அரசர்களாலும் வரவேற்று உபசரிக்கப்பட்டவர்கள். எங்களுக்குத் தெரியாத கலை கிடையாது என்றே கூறலாம். அதிலும் எல்லாக் கலைகளுக்கும் மேலான அலங்காரம் செய்துவிடும் அழகுக் கலையை நாங்கள் கற்றுத் தேர்ந்திருக்கிறோம். எந்த தேசத்திலாவது அரசனுக்குப் பட்டம் சூட்டுவதென்றால், அரசனை அலங்கரிக்க எங்களைத்தான் கூப்பிடுவார்கள்!"

இரண்டாவது எத்தன் அரசனைப்பார்த்து அரசே! முதல் தடவையாக இன்றைக்குத்தான் சாமுத்திரிகா லட்சணமென்று சொல்லப்படுகிற முப்பத்திரண்டு இலட்சணங்களையும் நேரில் உங்களிடத்தில் பார்க்கிறேன். உம்முடைய அழகுக்கு எதிரில் தேவர்மூவர்களும் ஈடாகமாட்டார்கள். மன்மதனும், சூரியனும், இந்திரனும், சந்திரனும், அழகேசனும் அக்னிதேவனும், இவர்களெல்லாம் ஒன்று திரண்டு வந்தாலும், உம்முடைய அழகுக்கு எதிராக இந்த மூவேழு இருபத்தோருலோகத்திலும்யாரும் கிடையாது" என்று புகழ்ந்தான்.

அரசனுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. மீசையை முறுக்கிவிட்டுக்கொண்டு நின்றான்.

"ஆனால்..." என்று எத்தன் தொடர்ந்தான்.

"என்ன, ஆனால் என்று இழுக்கிறாய்?" என்று அரசன் கேட்டான்.

"உங்களிடம் ஒரு ஆணுக்கு வேண்டிய முத்திரண்டு இலட்சணங்களும் இருக்கின்றன. ஆனால், ஒரே ஒரு குறை மட்டும்!"

"என்ன அந்தக் குறை?"

"உங்கள் அழகுக்கு ஏற்ற உடை மட்டும் இல்லை!"

"வேறு எப்படிப்பட்ட உடை இருக்கவேண்டும்!"

"உங்களுக்கென்று எங்களால் தயாரிக்க முடியும். ஆனால் அதற்குப் பெரும் பொருள் செலவாகும்."

"எனக்கேற்ற உடை தயாரிக்க, எவ்வளவு செலவானாலும், பாதகமில்லை! பொருள் தருகிறோம், உடையைத் தயார் செய்யுங்கள்!"

இரண்டு எத்தர்களுக்கும் தனியாகப் பெரிய மாளிகை தரப்பட்டது. அவர்கள் கேட்ட வசதிகளெல்லாம் செய்து தரப்பட்டன. அரசனுக்குப் பிரத்யேகமான உடைதயாரிக்கப்படுவதாகப் பிரபுக்களும் மந்திரி பிரதானியர்களும் பேசிக்கொண்டார்கள். ஊரிலும் இந்தச் செய்தி பரவியது. இரண்டு எத்தர்களும் இராஜோபசாரத்துடன் மாளிகையில் உல்லாசமாக இருந்தார்கள். சில சமயங்களில் சோம்பலைப் போக்கத் தறியின் முன்னால் உட்கார்ந்து காலை ஆட்டுவார்கள். தறி ஆடும். அதில் ஒன்றும் இருக்காது. வெளியில் உட்கார்ந்திருக்கும் பிரபுக்கள், அரசனுடைய பீதாம்பரம் தயாராவதாக நினைத்துக்கொண்டார்கள். அவர்கள் சென்ற பிறகு எத்தர்கள் சிரித்துக் கொண்டு நன்றாகச் சாப்பிட்டு, தூங்கப் போவார்கள்.

அரசன் ஒருநாள் அந்த எத்தர்களைக் கூப்பிட்டு "நமக்கேற்ற ஆடை தயாரிக்கப்பட்டுவிட்டதா?" என்று கேட்டான்.

"நூல் தயாரிக்கப்பட்டு விட்டது. இன்றைக்கு எட்டாம் நாள் நீங்கள் நகர்வலம் வரும் பொழுது, அந்த அடையணிந்து காட்சியளிக்கலாம்!"

அரசன் மகிழ்ச்சியடைந்தான். எட்டுநாளைக்குள் அதிசயிக்கத்தக்க, புதுப் பீதாம்பரம் தயாராகிவிடும் என்பதை பிரபுக்களும், மந்திரி பிரதானியர்களும், ஊர்மக்களும் கேள்விப்பட்டு, ஆவலுடன் காத்திருந்தார்கள்.

எட்டாம் நாள் வந்தது. ஒரு வேலைப்பாடான பெரிய பெட்டியுடன், எத்தர்கள் அரண்மனைக்கு வந்தார்கள். கொலுமண்டபத்தில் ஒரு மூலையில் மிக மெதுவாக அந்தப் பெட்டியை வைத்தார்கள். பிரபுக்களும் மற்றும் கூடியிருந்தவர்களும் பெட்டியின் பக்கம் கூடினார்கள். எத்தர்கள் அவர்களையெல்லாம் விலகச்செய்து, "இந்தப் பெட்டியில் இருக்கும் பீதாம்பரம் மிக மென்மையானது. கைபட்டால் கெட்டுவிடும். ஆதலால் ஒவ்வொருவராக வந்து பார்த்துப் போங்கள்!" என்றார்கள்.

பிரபுக்கள் வரிசையாக நின்றார்கள். முதல் பிரபு முன்னால் வந்தார்.

ஒரு எத்தன் மூடியைத் திறந்து, தூசியை ஊதிவிட்டான்.

பெட்டியின் அருகில் பிரபு வந்தபொழுது, எத்தன் அவரைத் தடுத்து "இந்தப் பீதாம்பரத்தைப் பார்க்கும்பொழுது ஒன்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும்தான் இந்த பீதாம்பரம் கண்ணுக்குத் தெரியும்! நல்ல குடும்பத்தில் பிறக்கவில்லையென்றால் அவர்கள் கண்களுக்கு இந்தப் பீதாம்பரம் தெரியாது? இப்பொழுது நீங்கள் பார்க்கலாம்!" என்று முதல் பிரபுவை அனுமதித்தார்கள்.

பெட்டியின் அருகே வந்த பிரபு, பெட்டியைப் பார்த்தார். அதில் ஒன்றையுங்காணோம். திகைப்புடன் எத்தர்களைப் பார்த்தார். முதல் எத்தன் "பொன்னிழையில் இந்தப் பூவேலைகளைப் போட நீண்ட நாள் பிடித்தது. இது மாதிரி வேலைப்பாட்டைநீங்கள் எங்கும் பார்த்திருக்க முடியாது!" என்று பெட்டியைப் பார்த்து, அதனுள் ஒரு வேலைப்பாடானப் பட்டு பீதாம்பரம் இருப்பதுபோலப் பாவித்துச் சொன்னான். பிரபுவும் நன்றாகக் கண்ணைக் கசக்கிப் பார்க்கிறார். ஒன்றையுங்காணோம். இரண்டாவது எத்தன் "முதலில் சொல்லியபடி நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும்தான் இந்தப் பீதாம்பரம் கண்ணுக்குத் தெரியும்!" என்று ஞாபகமூட்டினான். உடனே பிரபு "ஆகா! பிரமாதமான பீதாம்பரம்! திறமையான வேலைப்பாடு!" என்று பார்ப்பதுபோலப் பாவனைசெய்து, நகர்ந்தார். கண்ணுக்குத் தெரியவில்லை என்று சொன்னால், எங்கே தன் குடும்பக் கௌரவத்தைப்பற்றி அவதூறு வந்துவிடுமோ என்று அஞ்சி, அவர் அப்படிச் சொன்னார்.

அடுத்துவந்த பிரபுக்களில் எவரும் வேலைப்பாடான பட்டுப் பீதாம்பரத்தைப் பெட்டியில் பார்க்கவில்லையென்றாலும், எத்தர்கள் சொல்லியபடி "எங்கே, பீதம்பரம் இல்லையென்றால் நல்ல குடும்பத்தில் பிறக்காதவன்" என்ற அவதூறு கிளம்புமோ என்று பயந்து, பட்டாடை இருப்பதாகச் சொன்னார்கள். அதுமட்டுமா, "எங்குமே இதுபோன்ற ஆடைசெய்யப்பட்டது இல்லை! யாருமே இதற்கு முன் பார்த்திருக்க முடியாது! பட்டாடை என்றால் இதைத்தான் சொல்லவேண்டும்! எவ்வளவு பளபளப்பு, எவ்வளவு மினுமினுப்பு! பொன்னும் மணியும் பூவும் வண்ணமும் அப்படியே பூத்துக் குலுங்குகின்றன!" என்று போட்டியிட்டுக்கொண்டுப் புகழ்ந்தார்கள்.

கடைசியாக அரசன்வந்தான். பிரபுக்கள் புகழ்வதையெல்லாம் கேட்டு மகிழ்ச்சியடைந்தான். ஊர்வலம் வர குதிரையும் தயாராக இருந்தது. மற்ற ஏற்பாடுகள் தயாராக இருந்தன. எத்தர்கள் செய்து வைத்த ஆடையை எடுக்க அரசன் வந்தான்! பெட்டியைப் பார்த்தால், எதுவும் காணோம்! "எங்கே, அந்த ஆடை?" என்று கேட்டான்.

"பெட்டியில்தான் இருக்கிறுன்! வேகமாகக் கைவைத்து, அந்த மடிப்புக் கலைந்து விட்டது!" என்று முதல் எத்தன் கலைந்த ஆடையை மடிப்பது போலப் பாவனை செய்து சரி செய்தான். இரண்டாவது எத்தன் அரசரிடம் வந்து "இந்த ஆடைக்கு ஒரு மகத்துவம் இருக்கிறது. நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும் தான் இது தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. இதுவரை நல்ல குடும்பத்தில் பிறந்த பிரபுக்கள் இந்த ஆடையைப் பார்த்து, புகழ்ந்ததை நீங்களே கேட்டீர்கள்! இப்பொழுது நீங்களே ஆடையைப் பார்க்க வந்துவிட்டீர்கள். இந்த ஆடை எப்படியிருக்கின்றது?" என்று கேட்டான்.

ஆடையில்லாமலிருப்பதைக் கண்ட அரசனுக்குப் பயம் வந்தது. "மற்ற பிரபுக்கள் எல்லோரும் ஆடையைப் பார்த்துப் புகழ்ந்திருக்கிறார்கள். நம் கண்ணுக்கு மட்டும் தெரியவில்லையே! ஒருவேளை அரண்மனை வாசிகளைப்பற்றி வருகிற அவதூறுகளில் ஏதாவது நடந்திருக்குமோ! எதற்கும் இப்பொழுது சமாளித்துக் கொள்ளலாம்!" என்று பெட்டிக்குள் பார்த்து "பிரமா

(9-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

பட்ட மரம்

(முல்லைவழுதி)

நான் சிறுவனாக இருந்தபோது அந்த ஊருக்குச் சென்றிருக்கிறேன். அந்த நாளில் நான் ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன். சாந்தி அப்போது இரண்டாம் வகுப்போ என்னவோ படித்துக்கொண்டிருந்தாள். அதன் பின்பு நான் சாந்தியைப் பார்த்ததில்லை. சிலமுறை அத்தை மட்டும் நகரத்திலிருக்கும் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள்.

அம்மா கேட்பார்கள், "ஏன் அண்ணி சாந்தியை அழைத்து வருவதுதானே! செல்வம் தன் மனைவியைக் காணத் துடியாய்த் துடிக்கிறானே!" என்று. "அப்படி ஒன்றும் என் மகள் இவனைத் தேடி வந்துவிடமாட்டாள், அவளைக்காண இவன்தான் ஓடி வரவேண்டும்!—ஏண்டா மருமகப்பிள்ளை! வருகிறாயா?" என்று என்னை அன்போடு இழுத்தணைத்து உச்சிமோந்து முத்தமிடுவார்கள் அத்தை. நாணமும் மான உணர்ச்சியும் என்னை ஆட்கொள்ளும். அத்தையின் பிடியிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு, "நான் ஒன்றும் சாந்தியைப் பார்க்க உன்னுடன் ஓடிவரமாட்டேன்!" என்று விளையாடத் தெருவுக்கு ஓடிவிடுவேன். அம்மாவும் அத்தையும் கலகலவென்று சிரிக்கும் ஒலி என் காதில் விழும்.—அந்த இன்பமான நாட்களை எண்ணினால், ஏன் இன்னும் நான் சிறுபிள்ளையாகவே இருந்திருக்கக்கூடாது என்ற நினைப்புத் தோன்றுகிறது.

பத்தாண்டுகளுக்கு முன்பு சின்னஞ்சிறுமியாய் பாவாடையுடுத்து என்னுடன் கைகோர்த்து தெருவில் விளையாடிய சாந்தி, இன்று பருவமங்கையாய்க் காட்சி தருவாள்!...நடந்துகொண்டே சாந்தியின் எழிலுருவை, நினைவுத் திரையில், பல கோணங்களில் கண்டு ரசித்தேன்.

மாலைக் கதிரவனின் பொற்கதிர்கள் பட்டு, வயல்களில் தலைசாய்ந்து நின்ற தங்கநிற நெற்கதிர்கள், அழகாகக்காட்சியளித்துக் கொண்டிருந்தன. கோடையிலும் வற்றாத கன்னியாற்றை, அந்தச் சிற்றூர் தன் வனப்பிற்கு அரணாக்கிக்கொண்டிருந்தது.

ஆற்றின் குளிர்ந்த நீரில் நடந்துகொண்டிருந்தேன். என் உள்ளத்திலோர் இன்ப உணர்ச்சி! ஆற்றிலே நீர் முகக்க அத்தை வரும்போதெல்லாம் அவர்களுடன் நானும் சாந்தியும் வருவோம். சாந்தியின் முகத்திலே நீரை வாரி இறைப்பேன். "பாரம்மா செல்வத்தை! என் முகத்தில் தண்ணீர் தெளிக்கிறான்!" என்று சாந்தி சிணுங்குவாள். அத்தை என்னைப் பார்ப்பார்கள்—ஆத்திரத்துடனா? அன்போடு! "சாந்தி என்னை ஏன் செல்வம் என்று கூப்பிடுகிறாள்? அதனால் நான் தண்ணீர் இறைத்தேன்!" என்று ஆண்மையுடன் அத்தையைப் பார்த்துச் சொல்வேன். "அத்தான் என்று கூப்பிடு அம்மா. உன்னைவிட பெரியவனாயிற்றே செல்வம்......ஆம்படையானைப் பெயரிட்டு அழைக்கலாமா?" என்பார்கள் அத்தை, சிரித்துக்கொண்டே. "போ அத்தை!" "போ அம்மா!" என்ற எங்கள் இருவர் குரலும் ஒரே நேரத்தில் ஒலிக்கும், நாணத்தால் சாந்தியின் முகம் சிவக்கும்.—அன்று "செல்வம்" என்று அழைத்த சாந்தி, இன்றும் என்னை அப்படியே அழைப்பாளா? ஆற்று நீரை நான் அவள் முகத்தில் தெளித்து அத்தையின் கேலிச் சொற்களைப் பெற முடியுமா? சாந்தியுடன் கைகோர்த்து நான் தெருவில் விளையாட முடியுமா?

ஆற்றைக் கடந்து நடந்தேன். கோலச் சிற்றிடையில் குடத்தைத் தாங்கி, கூவும் குயில் குரலில் பேசிச் சிரித்துக்கொண்டே பெண்கள் என் எதிரில் வந்தனர். என் கண்கள் அந்தக் கோதையரை நோக்கிச் சுழன்றன. என்னை நோக்கியதும் அவர்கள் சிரிப்பும்பேச்சும சற்றுக் குறைந்தன. "இவர்களில் சாந்தி இருப்பாளா?" என்று என் கண்கள் துழாவின!

சாலையின் ஓரத்தில் பெரிய மாமரமொன்றைக் கண்டேன். கனிகள் அதில் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. நாக்கில் நீர் சுரந்தது. சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒருவரும் தெரியவில்லை. கனியொன்றைப் பறிக்கக் கை துடிதுடித்தது!...என்ன இது, பை நிறைய பழங்களை வைத்திருந்தேன், எல்லாமே தீஞ்சுவைக் கனிகள்! ஆனால் அன்னியனின் தோப்பிலிருக்கும் கனியை மனம் நாடுகிறதே, இது முறையா?—வெட்கித் தலைகுனிந்தேன். சிரிக்கும் குரலொலி கேட்டு, தோப்பின் பக்கம் என் விழி திரும்பியது. புல்தரையில் இருவர் அமர்ந்திருந்தனர். மறைவான இடம். அவர்கள் சிரித்திராவிட்டால், நான் அவர்களைப் பார்த்திருக்கவே முடியாது. கோதையின் கூந்தலை அந்தக் கட்டிளங்காளை கோதிவிட்டுக் கொண்டிருந்தான். சில கண நேரம் நினைவற்று நின்றேன்.

அனுபவித்து உணர்ந்துதான் மனதைக் குரங்கு என்றார்களோ? கனிகளை நாடி மந்தி மரத்திற்கு மரம் தாவுவதைப் போல, மனமும் அழகை நாடித் தாவித் தாவிச் செல்வதேன்'...முன்பு மனம், மரத்திலிருந்த கனியைப் பறிக்கக் கையைத் தூண்டியது, காதலனுடன் கொஞ்சி மகிழ்ந்துகொண்டிருக்கும்படி இப்போது கண்களைத் தூண்டுகிறது அதே மனம். மாமரம் தோப்புக்காரனின் சொத்து! மங்கை அவள் மனதைக்கவர்ந்தவனின் சொத்து! சபலத்தைவிட்டு மனம் திருத்திக்கொண்டு நடந்தேன்.

மலையில் முகம் புதைத்துக் கொண்டு சூரியன் மேற்கு வானில் வண்ண ஓவியம் தீட்டிக்கொண்டிருந்தான். இந்த எழிலோவியம் இன்னும் எவ்வளவு நேரம் இருக்கும்? இருள் கவிந்ததும் யாவுமே அழிந்து மறைந்துவிடுமே!......வாழ்வும் அப்படித்தான்: பிஞ்சு நெஞ்சிலே மலரும் இன்ப எண்ணங்களெல்லாம் வாழ்விலே நிகழ்ச்சிகளாய் மணக்க ஆரம்பித்தால், துன்பத்தைப்பற்றி நினைக்கவும் நேரமிருக்காதே! எவ்வளவோ எண்ணங்கள்—இனிய நினைப்புகள்—கானல் நீராகிவிடுகின்றன!

இருபத்துநான்கு வயதும் முற்றுப்பெறாத இந்த வாலிபப் பருவத்தில், என் வாழ்விலே எத்தனை பயங்கரத் திருப்பங்கள்! இரண்டே இரண்டு ஆண்டுகளில் நான் அனுபவித்த இன்னல்கள் எவ்வளவு!......மாண்டு மடிந்துபோன துயரச் சம்பவங்களை என் மனம் நினைவுத் திரையில் நிழற்படமாக்கியது. கண்கள் கலங்கின. பெருமூச்சுவிட்டேன்.

* * *

எனது பெயருக்கேற்பவே பெற்றோரால் நான் செல்வமாக வளர்க்கப்பட்டேன். நான் வழக்கறிஞனாக வேண்டுமென்று எனது தந்தை விரும்பினார்—சட்டக் கல்லூரியில் பயின்றவர்கள்தானே பிரமுகர்களாகவும் அரசியலை ஆட்டிப்படைக்கும் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள்! படிக்கும்போது எனக்கென்று எந்தவிதக் குறிக்கோளும் இலட்சியமும் இல்லாதவன் நான். அடிக்கடி உடைமாற்றிக்கொள்வதிலும், உடலழகைக் கவனிப்பதிலும், நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு 'பிக்னிக்' போவதிலும் பொழுதைக் கழித்தேன். ஆனால் படிப்பிலும் முதல்வனாக இருந்தேன்.

கல்லூரிப் படிப்பின்போதுதான் என் உள்ளத்தில் காதல் மலர்ந்தது. வேணி என் நெஞ்சைக் கவர்ந்தாள். அவள் முல்லைச் சிரிப்பும், முளரி வதனமும், பிறைநுதலும், பேசும் கண்களும் என் உள்ளத்தைக் கவ்வினாற்போலவே, எனது தோற்றமும், அவள் விழிகளுக்கும் உள்ளத்திற்கும் வேலை கொடுத்தது.

விளக்கைச் சுற்றி வட்டமிடும் விட்டில்களைப்போல, மாணவர்கள் வேணியின் கண்ணின் கடைப்பார்வைக்காகக் 'கடுந்தவம்' கிடந்தனர். தங்கநிறத் தையலாள் வேணியின் அங்க அமைப்பு அழகிற்கோர் எடுத்துக்காட்டாக இருந்தது. அவளுருவம் மனதிலே தோன்றும்போது இன்ப மயக்கம் ஏற்படும்.

பிறரைப்போல நான், நிழல்போல வேணியைத் தொடரவில்லை; வெறித்தவனைப்போல் பார்த்துப் பெருமூச்சு விடவில்லை; குழுவாகச் சேர்ந்து அவளைச்சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்யவில்லை; சுய புராணம் படிக்கவில்லை; பொறுமையைக் கையாண்டேன்; தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தேன்; எனது எண்ணத்தைக் கூறினேன்; அவள் சம்மதித்தாள்.

வேணியை நான் மணக்க முடிவு செய்திருப்பதைக் குறித்துத் தந்தைக்குக் கடிதமெழுதினேன். அன்னை அபாயநிலையிலிருப்பதாகவும், உடனே வரும்படியும் அவரிடமிருந்து தந்தி வந்தது. அலறிப் பதறிக்கொண்டு ஊருக்குப்போனேன். என் காலைக் கட்டிக்கொண்டு அன்னை அழுதார்கள். தந்தை உறுதியாகக் கூறிவிட்டார். என் மனம்போல் நடப்பதானால் வீட்டை விட்டு வெளியேறும்படி. ஆத்திரத்தை எதிர்ப்பதில் எப்போதுமே சிரமமிருப்பதில்லை. அன்பிலே பிறந்த அன்னையின் கண்ணீரைக் கண்டு நான் செயலற்றவனானேன். "உனக்கென்றே பிறந்த உன் அத்தைமகள் சாந்தியை மறந்துவிட்டாயா? கல்லூரிப் படிப்பு உனக்குக் கற்றுத் தந்த பாடம் இதுதானா?...சாந்தியை அபலையாக்கிவிடாதே! குடும்பத்தின் மதிப்பை—குலத்தின் கௌரவத்தை — குலைத்துவிடாதே! எங்களைத் திக்கற்றவர்களாக்கிவிடாதே!" என்று அன்னை கதறினார்கள்; கண்ணீரால்

என்னைக் குளிப்பாட்டினார்கள். சில நாட்கள் என் மனம் சூனிய வெளியில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது.

பரீட்சை நெருங்கி வந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். அன்னைக்கு நல்ல பதிலைக் கூறுமலேயே, வெதும்பிய உள்ளத்துடனும் நீர் துளிக்கும் கண்களுடனும் அவர்கள் என்னை வழியனுப்ப, நான் புறப்பட்டேன். வேணியின் உருவத்தை என் நினைவுத் திரையிலிருந்து அழித்துவிட என்னுல் முடியவில்லை.

தேர்வு முடிந்தது. ஊருக்கு வரும்படி தந்தையிடமிருந்து கடிதம் வந்தது; அவர் மனம் நோகும்படி பதில் எழுதினேன். அன்னை அபாயநிலையில் இருப்பதாக அவசரத்தந்தி வந்தது; அதற்கு நான் பதிலும் எழுதவில்லை. அன்னை இறந்துவிட்டார்கள் என்று மீண்டும் ஒரு தந்திவந்தது. என்னை ஊருக்கு வரும்படி செய்வதற்காகத் தந்தை செய்யும் தந்திரம், அவரே வழிக்கு வரும்வரை ஊரின் திசைப் பக்கமும் திரும்பிப் பார்க்கக் கூடாதென்று தீர்மானித்தேன். தந்தியை வேணிக்குக் காட்டினேன். எல்லாம் வெறும் புரட்டு என்று கூறி அவளை அழைத்துக் கொண்டு, உல்விவர கடற்கரைக்குச் சென்றேன். இன்பமாகக் காலம் ஓடிக்கொண்டிருந்தது!

செய்தித்தாளில் தேர்வின் முடிவு வெளியாயிற்று. எதிர்பார்த்தபடியே நான் முதல் வகுப்பில் தேறியிருந்தேன்; வேணியும் அவ்வாறே! செய்தித் தாளின் அடுத்த பக்கத்தைப் புரட்டிய வேணி, கரம் நடுங்க அதை என்னிடம் நீட்டினாள். கண்ட நான், நஞ்சுடைய நாகத்தை மிதித்தவன்போல் அலறினேன். என் தந்தை இறந்துவிட்டதாக அதில் வெளியாகியிருந்தது! என் கண்கள் சுழன்றன. மேற்கொண்டு வேணியைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன்.

"........சங்கரலிங்கம் காலமானார். சமீபத்தில் இவர் மனைவி காலமாகிவிட்டதாகத் தெரிகிறது. இவருக்கு ஓர் மகன் உண்டு என்றும், அவன் பெற்றோரின் இறுதிச் சடங்குகட்கும் வராமல் பட்டணத்தில் தான்தோன்றித்தனமாய் சுற்றிக் கொண்டிருப்பதாகவும், மனமுடைந்துபோன சங்கரலிங்கம் தமது சொத்து முழுவதையும் தமது தங்கையின் மகளுக்கு எழுதிவைத்துவிட்டதாகவும் தெரிகிறது......"

வேதனையைப் போக்கிக் கொள்ள நான் தனிமையை நாடினேன்; அமைதி இருக்குமிடம் எங்கே என்று தேடினேன். என் பிரிவால் ஏற்பட்ட வேதனையால் மனம் சூமுறி இறந்துவிட்ட அன்னை, என் கண்ணெதிரில் நிழலுருவில் காட்சியளித்தார்கள்!

கடைசி நேரத்திலும் பெற்றோரைக் காணுமலிருந்துவிட்ட எனது கன்னெஞ்சம், இப்போது கதறிக்கதறி ஓயாது ஓலமிட்டு அழுதது! உணவை வெறுத்தேன், உலகைவெறுத்தேன், ஏன், வாழ்வையே வெறுத்தேன் எனினும் ஓர் சக்தி என்னை வாழவிட்டது; அந்த ஒரு சக்திதான், வேணி!

பத்திரிகையில் செய்திவெளியாகி ஒரு வாரம் சென்றது. வேணியைக் காண நான் சென்றேன். "என் பெற்றோரின் முடிவும் தங்கள் தாய் தந்தையர் முடிவைப்போலவே ஆகிவிடக்கூடாது என்பதற்காக, எனது எண்ணத்தை மாற்றிக் கொண்டேன் செல்வம்!" என்று கூறி, திருமண அழைப்பிதழை என் முன் நீட்டினாள் வேணி! படித்தேன்; வேணிக்குத் திருமணம்! மயங்கித் தரையில் வீழ்ந்தேன்.

மயக்கம் தெளிந்து எழுந்து அவ்விடம் விட்டு நடந்தேன். "காதல்! காதல்!" என்று யாரோ ஏளனத்துடன் கை கொட்டிச் சிரிப்பதைப்போல் கேட்டது! அறைக்குச் சென்றேன். கண்ணாடியில் என்னைப் பார்த்தேன். எனக்கே என்னுருவம் பயங்கரமாகத் தெரிந்தது! "வேணி நல்வாழ்வு வாழட்டும்;...இந்த ஓட்டாண்டியை மணந்துகொண்டு அவள் என்ன சுகம் காண்பாள்?" என்று மனதிற்கு ஆறுதல் கூறிக்கொண்டேன்.

வேணி வாழத் தெரிந்தவள். அவள் புத்திசாலி! இல்லையென்றால், பஞ்சையினும் கேடான என்னை உதறித்தள்ளியிருக்கமாட்டாளே!

படித்ததால் கிடைத்த நற்சான்றிதழைக் கரத்திலேந்திக் கொண்டு வேலைதேடும் படலத்தைஆரம்பித்தேன். எனது நிலையறிந்த எங்கள் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மனங் கனிந்து முயன்று எனக்குக் கல்லூரியிலேயே விரிவுரையாற்றும் பணியை வாங்கிக் கொடுத்தார்.

ஏறத்தாழ ஒத்த வயதுடைய கல்லூரி மாணவர்களுடனும், அறிவுக் கருவூலங்களான பேராசிரியர்களுடனும் பழகுவதில் சிறிது சிறிதாக எனது துயரம் மறைந்து கொண்டே வந்தது. தமிழ்ப் பேராசிரியரிடம் மனம் விட்டுப் பழகினேன். அவர் எனக்கு ஆசானக மட்டுமில்லாமல் தந்தையாக, சகோதரனாக, நண்பனாக இருந்தார்.

வேணிக்கு மணமான அன்று நான் அடைந்த வேதனை கொஞ்சமல்ல. அவளுக்காக நான் பெறவியலாத பெற்றோரை இழந்தேன். வாழையடி வாழையாக விளங்கி வந்த குடும்பத்தின் மதிப்பையும், மூதாதையரின் சொத்தையும், துறந்தேன். பெற்றோரின் மரணத்துயரையும் பொறுத்துக் கொண்டேன். மனதிற்கினியவளை மணந்துகொண்டு வாழப் போகிறோம் என்ற நிம்மதியில்.

ஆனால், என் மனக்கோட்[டை] சரிந்துவிட்டது...

என் காதல் கதையை ஆ... ரியரிடம் கூறினேன். அமை... யாக அவர் கூறினார்: "அ... கையும் பகட்டான தோற்ற... தையும் காணும்போது, உ... ளத்தில் ஏற்படும் கிளர்ச்சியா... உணர்ச்சி வசப்பட்டு விடு... றோம். அந்த உணர்ச்சிக்கு... பெயரல்ல காதல்; அ... கானல் நீர்! காதல் என்ப... உள்ளமும் உள்ளமும் ஒன்... வதால் உண்டாவது; அங்... அன்பின் ஊற்று சுரந்... கொண்டேயிருக்கும். ப... பட்ட இரண்டு உள்ளங்களி... தோன்றும் காதல், மலையசை... தாலும் அசைந்து கொடு... காது! உள்ளத்தால் ஒன்றும... வெறும் உணர்ச்சிக்கு... வெளித் தோற்றத்திற்கும் ம... தைப் பறிகொடுப்போர் மு... வில் தோல்வி கண்டு "காதல... வது கத்தரிக்காயாவது!... என்று மனமுடைந்து பேசுகி... றனர்; மனமுறிவை மே... கொள்ளுகின்றனர்"... ஆசி... யர் எனக்கு ஆறுதல் கூறினா... சாந்தியை மணந்துகொள்ளு... படி அறிவுரை கூறினார்.

சாந்தி என்னைமணக்க இ... வாளா? அவள் பெயருக்கு எ... தப்பட்ட எனது தந்தையி... சொத்துக்காகவே இப்போ... அவளை நான் நாடுவதா... அவள் நினைத்தால்?... என... சொத்துரிமையை சாந்தி பெ... றதற்காக நான் கவலைப்ப... வில்லை; எனது செயலுக்கா... மனமுடைந்த தந்தை, கோ... லுக்கும் மடத்துக்கும் எழு... வைக்காமல் சாந்தியின் பெ... ருக்காவது எழுதிவைத்தா... என்று ஆறுதலே அடை... தேன்.

அழிந்த என் குடும்பத்தை... பற்றியே எந்நேரமும் எண்ண... நைந்து கொண்டிருந்த எனக்... காலத்தின் சிகிச்சை பலனளி... தது. இடைவிடாது வீசி... கொண்டிருந்த மனப்புய... குறைந்து, எப்போதாவ... பழைய நினைவுகள் வரு... மனதில் புயல் வீசும்; பிற... ஓய்ந்துவிடும். மனிதனின் வா... விற்கு உற்ற துணையாக இரு... பது மறதிதான். முள்ளை... போல் நெஞ்சைக் குத்தி... துன்புறுத்தும் நிகழ்ச்சிக... வாழ்க்கையில் ஏற்படுகின்ற... காலடைவில் அவற்றை மற... து விடுகிறோம். எப்போதாவ... பழைய சம்பவங்கள் நினைவுக்... வருகின்றன; அவை துயர... தோய்ந்தவையாகவும் இன்ப... தேங்கியவையாகவும் இரு... கின்றன. நினைப்பிற்கேற்ப ம... தில் துயரமும் மகிழ்ச்சியு... ஏற்படுகின்றன. மறதியே இ... லாது—எப்போதாவது நினை... பதை விட்டு—கடந்த நிகழ்ச்... களை எப்போதுமே நினைத்து... கொண்டிருக்கும் நிலை இருக்... மானல், மனிதனுக்கு வாழ்... லே அமைதி ஏது? தென்... லேது? இன்பமேது?

போர் தொடுப்போம்!

(பொன்னிவளவன்)

இந்திஇந் நாட்டுக்குத் தேவையில்லை—திசை
எட்டும் அதிர்ந்திடக் கூறிடுவோம்!
செந்தமிழ் பேசிடும் தோழர்களே!—மேலும்
சீர்மை குலைந்திடத் தூங்குவதா?

சங்கத் தமிழ்ஒரு பொன்னிநதி!—இந்தி
சாக்கடை போன்றது தோழர்களே!
சிங்கத் தமிழ்க்குல வீரர்களே!—நாம்
செந்தமிழ் காத்திடக் கூடிடுவோம்!

ஆட்சி புரிந்திடும் தில்லிஇன்னும்—நம்மை
ஆட்டிப் படைத்திட எண்ணுவதா?
மாட்சி மிகுந்தவர் நாமெனவே—அந்த
மாற்றவர் ஏற்றிடப் போர்தொடுப்போம்!

சொத்தை மொழிக்கென்ன மேன்மையடா!—வெறுஞ்
சோற்றுத் துருத்திக ளாதமிழர்?
முத்தமிழ் காத்திடக் கூடிடுவோம்!—அவர்
மூக்கை அறுத்திடப் போர்தொடும்போம்!

செந்தமிழ் தன்னை ஒழித்துவிட—அந்தச்
சின்னவர் செய்திடும் சூழ்ச்சியெலாம்
வெந்து பொடிப்பொடி யாகிவிடும்—வரி
வேங்கைக ளே! இங்குக் கூடிடுவோம்!

தமிழையாவின் அறிவுரையை ஏற்று, சாந்தியைக் காண நான் அத்தையின் ஊருக்குப் பயணமானேன்.

சாந்தி என்னை ஏற்பாளா? சிறிய வயதில் பழகிய பாசம் அவளுடைய சம்மதத்தைத் தருவதாயினும். அவள் பெற்றோர் சாந்தியை எனக்குத் தர இசைவார்களா? அத்தையின் அன்பு மாறுதிருக்குமா? பெற்றோரின் சாவுக்கும் வராத புண்ணியாளன் நீ! எங்கள் முகத்தில் விழிக்க உனக்கு வெட்கமாயில்லையா?—என்று இழித்துரைப்பார்களா? — என்றெல்லாம் எண்ணினேன். வந்த வழியே ஊருக்குத் திரும்பிவிடலாமா என்று யோசித்தேன். மனம் சிந்தனை செய்தது; கால்கள் நடந்து கொண்டே இருந்தன.

அந்திவானத்தின் அழகிய தோற்றமும், வயற்பரப்பின் பசுமையழகும் என் கண்களுக்குக் குளிர்ச்சியையும் மனதிறகு அமைதியையும் தந்தன. ஆற்றங்கரையில் அழகிகளைக் கண்டபோது, சாந்தியைக் காண வேண்டுமென்று மனம் ஆவலால் துள்ளியது. சோலையிலே குலவி மகிழ்ந்து கொண்டிருந்த காதலர்களை கண்ணுற்றபோது, வேணியின் நினைவு வந்தது; என வாழ்வில் தோன்றி மறைந்த சோக நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன.

* * *

சிந்தனையிலிருந்து நான் மீண்டபோது, ஊரைத்தாண்டி ஒரு கல் தூரம் வந்துவிட்டிருப்பதை உணர்ந்தேன். எனது செய்கைக்கு வெட்கித் தலை குனிந்து, வந்தவழியே திரும்பிச் சென்றேன.

அத்தை என்னை அன்புடன் வரவேற்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. "வந்தாயா செல்வம்! என் வயிற்றில் பாலை வார்த்தாயே!" என்று என்னைக் கட்டிக் கொண்டு அழுதார்கள் அத்தை. மாமா இன்முகத்துடன் பேசினார். சிறிது நேரத்தில், நடமாடும் அழகுச் சிலையொன்று சிற்றிடையில் நீர்க்குடமேந்தி வந்தது! "வாம்மா சாந்தி. இதோ பாரம்மா உன் அத்தான்!" என்று ஆவல் பொங்கும் குரலில் அத்தை கூறினார்கள். அழகிய நயனங்கள் என்னை நோக்கின. சாந்தியா அவள்! இவ்வளவு அழகியா சாந்தி! என்னால் நம்பவே முடியவில்லை.

"நலமா சாந்தி?" என்றேன். "உம்..." என்றாள். கனிகுலுங்கும் மாமரம் கண்ணெதிரில் இருக்குபோது, காட்டில் காணும்போது நச்சுக்கனியை நாடித்திரிந்தோமே! — என்று மனம் வருந்தினேன். அத்தானும் அத்தையும் அருகிலிருப்பதையும் மறந்து, கண்ணிமைக்காமல் சாந்தியை வெறித்தவனைப்போல் பார்த்துக் கொண்டிருந்தேன்!

நான் வந்த விவரத்தைப் பற்றி அத்தையிடம் பேச எனக்கு நா எழவில்லை; சாந்தியையே கேட்டுவிடவும் துணிவு ஏற்படவில்லை; மாமாவிடம் இதுபற்றிப் பேச்செடுக்க அணுவளவும் நெஞ்சில் உரமில்லை.

இரண்டு நாட்கள் சென்றன. நான எடுத்து வந்த விடுமுறை மறுநாளோடு முடிவடையும். இனியும் பேசாமலிருந்தால் பயனில்லை யென்று துணிவு பெற்று அத்தையைக் கேட்டேன் "கனிக்கு உரியவன் நீ! பறிக்காதே என்று தடை சொல்ல எனக்கு என்னப்பா உரிமை?" என்று சிரித்தார்கள். "உண்மையாகவா அத்தை! மாமா இதற்குச் சம்மதிப்பாரா?" என்று வாய் பிளந்து கேட்டேன். இனிக்கும் பதிலையே அத்தை சொன்னார்கள். "சாந்தியின் சம்மதம் வேண்டாமா?" என்றேன் "அவள் பெற்றோர்க்கு அடங்கிய பெண்ணப்பா!" என்றார்கள். என் மனதில் சுருக்கென்று தைத்தது. அத்தையின் மனம் பளிங்கு போன்றது என்பதை அறிந்தவன் நான். ஆகவே அவர்கள் கூறியதைத் தவறாகக் கொள்ளவில்லை. அடுக்களையிலிருந்த சாந்தியை அழைத்தேன். "என்னை மணந்து கொள்ள உனக்கு விருப்பமா சாந்தி?" என்று அத்தையின் எதிரிலேயே கேட்டேன். ஒன்றும் சொல்லாமல் தலைகுனிந்த வண்ணம் அவள் திரும்பிச் சென்றாள். மௌனம் ஒப்புதலுக்கு அறிகுறியா?—அத்தையைப பார்த்தேன். அவர்கள் மூறுவலித்தார்கள்!

மனதைக் கொள்ளை கொள்ளும் மாலைப்பொழுது வந்தது. நீர் எடுத்து வர, சாந்தி ஆற்றிற்குப் புறப்பட்டாள். சிறிய வயதில் அவளுடன் பழகிய நாட்கள் என் நினைவிற்கு வந்தன. ஆற்றை நோக்கிச் சென்றேன். அங்கே சாந்தியைக் காணவில்லை. அன்று வந்த அதே பெண்கள், நீர் எடுத்துக்கொண்டு திரும்பினர். "சாந்தியைக் காண வந்திருப்பார்போலிருக்கிறது!" என்று ஒருத்தி களுக்கென்று சிரித்தாள். மற்றவர்கள் கலகலவென்று நகைத்தனர். பெண்களே இப்படித்தான்! தனித்திருக்கும் ஆடவரைக் கேலி செய்து சிரிப்பதிலேயே அவர்களுக்கு அலாதி மகிழ்ச்சி!— என்று மனதிற்குத் தேறுதல் கூறி, மணற்பரப்பில் படுத்தேன். மங்கையர் போவதை விழிகளை நீட்டிப பார்த்துக் கொண்டேயிருந்தேன். தூரத்தில் சாந்தி வருவதைக் கண்டேன். எனக்கு முன்பு புறப்பட்ட சாந்தி, இவ்வளவு நேரங் கழித்து வருகிறாளே!—என்று சிந்தித்தேன்... அருகில் வந்தாள் சாந்தி. "எப்போது வந்தீர்கள் அத்தான்?" என்றாள. "ஏன் வந்தாய்? என்று கேட்காமற் போனாயே!" என்றேன், சிறித்தவாறே, "நீங்கள் படித்தவர்; பட்டம் பெற்றவர். உங்களுடன் பேச என்னால் முடியுமா?" என்றாள். "உன் வாய் செய்ய வேண்டிய வேலையை விழிகள் செய்கின்றனவே, அவற்றை வெல்ல என்னால் முடியுமா?" என்றேன். சாந்தி தரை நோக்கியபடியே நடந்து சென்று, குடத்தில் நீர் முகந்தாள். "சாந்தி!" என்றேன். என் குரல் கம்மி ஒலித்தது. குனிந்தபடியே முகத்தை என் பக்கம் திருப்பினாள். பேதும்பைப் பருவத்தில் அவள் என்னுடன் பழகிய நாட்களை நினைவுபடுத்தினேன், மணல் வீடுகட்டி, மரத்தடியில் சின்ன அடுப்பில் சிறிய கலயத்தில் சோறாக்கி, மரப்பாய்ச்சிகளுக்கு உணவு படைத்து அவற்றிற்குத் திருமணம் செய்துவைத்து விளையாடிய சம்பவங்களை நினைவு படுத்தினேன், நீர்க்குடத்தை இடையிலேந்தி அவள் மௌனமாக நடந்தாள்; ஓரிடத்தில் நின்றாள். "மாங்கொட்டை ஒன்றை நிலத்தில் ஊன்றி, நீரூற்றி வந்தோமே, நினைவிருக்கிறதா அத்தான்?" என்றாள். "ஆமாம், அது முளைத்து தளிர்விட்டு செடியாக வளர்ந்ததே!" என்றேன், "தருவாகக்கூட வளர்ந்தது அத்தான்! ஆனால், பலன் தருமுன்னமே அது பட்டுப் போயிற்று!" என்று அந்த உலர்ந்த மரத்தைக்காட்டினாள். நான் ஒன்றும் பேசவில்லை; அவளைப் பின்தொடர்ந்து நடந்தேன்.

சாந்தி ஆரம்பப் பள்ளிப் படிப்போடு நின்றுவிட்டவள் தான். ஆனால், வார்த்தைக்கு வார்த்தை விட்டுக் கொடுக்காமல் வேணியுடன் கல்லூரியில் வாதமிட்டு வெற்றியே கண்ட எனது சொல்வன்மை, சாந்தியிடம் தோற்றது! பட்டமரம் அவள் கவனத்தை ஏன் கவர்ந்தது?... பெண்மனம் புரியாத புதிர் என்கிறார்களே, அது உண்மையா? அல்லது சிந்திக்கத் தெரியாதவர்களின் அவசரக் கூற்றா?

நாளை காலை ஊருக்குச் செல்லவேண்டும் என்று அத்தையிடம் கூறினேன். "இதற்குள்ளாகவா அத்தான?" என்றாள் சாந்தி. "போய் விடுமுறை வாங்கிக்கொண்டு வருகிறேன்—நமது திருமணத்திற்கு!"! என்றேன். அத்தை சாந்தியின் முகம் நோக்கினார்கள். சாந்தி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். நான் அத்தையைப் பார்த்தேன். "வெட்கத்தைப் பார் வெட்கத்தை! அன்னியனா உன்னுடன் பேசுகிறான்? எப்படித்தான் நீ இவனுடன் குடும்பத்தை நடத்தப் போகிறாயோ!" என்று சாந்தியைக் கேலி செய்தார்கள் அத்தை.

நள்ளிரவு நேரமாகியும் தூக்கம் வராமல் நான் புரண்டு புரண்டு படுத்தேன். சாந்தி தூங்கவில்லை யென்று தெரிந்தது. "அம்மா!" என்றாள் சாந்தி. அத்தை நன்றாக தூங்கிக்கொண்டிருந்தார்கள். சாந்தி மெதுவாக எழுந்து சென்றாள். பூனைபோல் ஓசைப்படாமல் அவளை நான் பின்தொடர்ந்தேன். அவள் வளைக்கரம் பற்ற என் கைகள் துடித்தன. எனக்கு மனைவியாகப் போகிறவள் தானே சாந்தி? என்னைத் தடை செய்ய யாரிருக்கிறார்கள்?—என்ற எண்ணம் எனக்குத் துணிவையூட்டியது! புறக்கடைப் பக்கம் சென்றாள் சாந்தி. அங்கே புல் தரையில் அமர்ந்தாள். அவளருகில் நான் அமர்ந்தேன். "அத்தான்!" என்றாள். "அன்பே" என்று கூறியவண்ணம் அவளை நெருங்கி உட்கார்ந்தேன்; "என்னை மன்னித்து விடுங்கள்!" என்றாள் சழுதழுத்த குரலில். "நீ ஒரு குற்றமும் செய்யவில்லையே கண்ணே! எதற்காக உன்னை நான் மன்னிக்க வேண்டும்?" என்று அவள் மலர்க்கரம் பற்றினேன். "வேண்டாம் அத்தான்! என்னை மணக்கும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்!" என்று கரத்தை விடுவித்துக் கொண்டாள். "என்ன சொல்கிறாய் சாந்தி?" என்றேன்திகைத்தவாறே! "எனது உள்ளம் வேறொருவருக்குச் சொந்தமாகிவிட்டது" என்றாள்!

பெய்த பனியினால் ஏற்பட்ட குளிராலோ, அல்லது ஏமாற்றத்தால் ஏற்பட்ட உணர்ச்சியாலோ எனது உடல் நடுங்கியது!

"என் பெயருக்கு மாமா எழுதியிருக்கும் சொத்து, எனக்கு வேண்டாம் அத்தான்! அது தங்களுக்கே உரியது!"

உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தேன். கதவைத் திறந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினேன். "இந்த நள்ளிரவில் எங்கே அத்தான்?" என்ற சாந்தியின் குரல், கிணற்றிலிருந்து ஒலிப்பதைப்போன்றிருந்தது!

மாந்தோப்பு எதிர்ப்பட்டது! என் இதயத்தைப் போலவே அதில் பயங்கர இருள் சூழ்ந்திருந்தது! மாலையில் அந்தத் தோப்பில் குலவி மகிழ்பவர்கள், சாந்தியும் அவள் காதலனுமா?... அதற்காகத்தான் அந்தப் பெண்கள், ஆற்றங்கரையில் என்னைப் பார்த்து நகைத்தார்களா?...

பசுமை இழந்து உலர்ந்து போன மாமரம், சாலையோரத்திலே கறுமையாகத் தெரிந்தது! சாந்தியும் நானும் சிறிய வயதிலே நீருற்றி வளர்த்த மரம்தான்—பருவத்திலே பலன்தராமல் பட்டுப்போய் விட்டது!

"பட்டமரம்" என்று முணுமுணுத்தேன். கால்போன திசையிலே நடந்துகொண்டிருந்தேன்.

0

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மான பீதாம்பரம்!" என அவரும் கூறிவிட்டார்.

"சரி, ஊர்வலம் கிளம்ப நேரமாகி விட்டது. பட்டாளத்துக் குதிரையும் தயாராக இருக்கிறது. இருக்கும் ஆடையைக் களைந்துவிட்டு, இந்த ஆடையை உடுத்திக் கொள்ளுங்கள்! நாங்களே உங்களுக்கு உடையலங்காரம் செய்கிறோம்!" என ஆடையை எடுப்பதுபோல, பிரிப்பதுபோல, பாவனை செய்து அரசனுடைய ஆடைகளைக் களையச்செய்து, தங்களுடைய கற்பனை ஆடையை உடுத்துவதுபோலக் காட்டி, வெளியே அழைத்து வந்தார்கள்!

ஆடை யெதுவுமின்றி அரசன் வருவதைக்கண்ட பிரபுக்கள் திடுக்கிட்டார்கள். "நாங்கள் நெய்த ஆடையை அரசருக்கு அணிந்து அழைத்து வந்திருக்கிறோம். ஆடையின் மகத்துவம்தான் உங்களுக்குத் தெரியுமே!" என்று எத்தர்கள் பிரபுக்களைப் பார்த்துச் சொன்னார்கள். ஆடையின் மகத்துவம் என்றதும் ஒவ்வொரு பிரபுவுக்கும் நெஞ்சு திடுக்கிட்டது. மற்றவர்களுக்கெல்லாம் தெரிகிற ஆடை நமது கண்ணுக்குமட்டும் தெரியவில்லை என்று நினைத்து, தானும் பார்த்ததுபோல ஒவ்வொரு பிரபுவும் பாவனை செய்தார்.

"அரசே! இந்த ஆடை தங்களுடைய பொலிவான தோற்றத்தை இன்னும் பொலிவுடையதாக, அழகுடையதாக ஆக்கியுள்ளது! இவ்வளவு அருமையான ஆடையை நெய்தவர்களுக்கு என்ன பரிசு கொடுத்தாலும்தகும்!" என்று பிரபுக்கள் புகழ்ந்தார்கள்.

"நமது கண்களுக்கு மட்டும் தான் ஆடை இருப்பது தெரியவில்லையே தவிர, மற்றவர்களெல்லாம் ஆடையைப்பற்றிப் புகழ்ந்து சொல்கிறார்களே! ஆக, நாம் ஆடை அணிந்து கொண்டுதானிருக்கிறோம்!" என்று முதலில் கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமும் போய், நிம்மதியுடன் குதிரைமேல் ஏறியமர்ந்து, ஊர்வலம் வந்தான்.

புதிதாக ஒருஆடையணிந்து வருகிற அரசனைக் காண நகர மக்கள் வீதிகளின் இருமருங்கிலும் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். ஆடையின் மகத்துவம் பற்றி அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்ததால், நல்ல குடும்பத்தில் பிறக்கவில்லையென்ற பழிக்கு ஆளாகாமல் இருப்பதற்காகப் பேசாமல் இருந்தார்கள்.

ஆடையெதுவுமின்றி அரசன் குதிரைமேல் அமர்ந்து பவனிவந்தான். ஊர்மக்கள் எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்!

அரசனைப் பார்க்கக் கூடியிருந்த கூட்டத்தில் ஒரு சிறுவனும் இருந்தான். அவனுக்கு ஆடையின் மகத்துவம் பற்றியோ, வாய் மூடி வேடிக்கை பார்க்கும் தன்மைபற்றியோ எதுவும் தெரியாது. அவன் இருக்கும் பக்கத்தில் ஊர்வலம் வந்தது. குதிரைமேல் அரசன் இருக்கும் கோலத்தைப் பார்த்ததும், அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அரசன் அம்மணமாகப் போகிறாரே!" என்று அவன் சிரித்தான்!

அவ்வளவுதான் அதுவரை சிரிப்பையெல்லாம் அடக்கி வைத்துக்கொண்டிருந்த சீமான்களும், சீமாட்டிகளும், மந்திரி பிரதானியர்களும் மக்கள் கூட்டத்தினரும், தங்களையும் அறியாமல் சிரித்துவிட்டார்கள்!

சிறுவன் ஆரம்பித்த சிரிப்பு, அலைபோலப் பரவியது!

சிறுவன் சொல்லிய உண்மையை இப்பொழுது எல்லோரும் மிகத் தாராளமாகச் சொல்லிச் சிரித்தார்கள்!

மக்கள் சிறிப்பதைக் கண்ட மன்னன் கோபமுற்றான். சிரிப்பின் காரணத்தை மந்திரிகள் மிகச் சாமர்த்தியமாக மன்னனுக்கு விளக்கினார்கள். அதைச் சொல்லி முடித்ததும் மந்திரிகளுக்கேச் சிரிப்பு வந்தது!

மன்னன் வேகமாக அரண்மனைக்குள் விரைந்து சென்றான் இவற்றுக் கெல்லாம் முன்னதாக, இரண்டு எத்தர்களும் அந்த ஊரைவிட்டு விரைவாகச் சென்றுவிட்டார்கள்!

எத்தர்களின் பேச்சுக்கு இணங்கி எள்ளி நகையாடும் நிலைக்கு வந்த அரசனைப்போல, நமது இந்திய அரசாங்கம் பல சமயங்களில் எத்தர்களின் பேச்சையும் பித்தர்களின் பேச்சையும் கேட்டு ஊரும் உலகமும் கண்டு எள்ளி நகையாடும் நிலைக்கு வந்துவிடுகிறது.

எப்படிக் கதையில் வருகிற எத்தன் தான் செய்த புரட்டு வெளிப்படாதிருக்க, "நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களின் கண்களுக்கு மட்டும்தான் இது தெரியும்" எனச் சொல்லி வைத்தானோ, அப்படியேதான் இந்திய அரசியலில் உலவுகிற எத்தர்கள் தாங்கள் செய்யப் போகிற காரியத்தை "நல்ல தேசபக்தி உள்ளவர்கள் மட்டும் ஒப்புக்கொள்வார்கள்" எனச் சொல்லிவிடுகிறார்கள்.

அரசன் ஆடையின்றி வருவதைக் கண்ட பொழுதும் அந்த உண்மையைச் சொன்னால் எங்கே நல்ல குடும்பத்தில் பிறக்காதவன் என்ற பழிச்சொல் வருமோ என்று பார்த்தவர்கள் அஞ்சி இருந்தது போல, இந்திய அரசாங்கமும் காங்கிரசு ஆட்சியாளர்களும் செய்கிற பல, சரியான விளக்கமற்ற, யோசித்துப் பார்த்தால் படுமோசமான காரியங்களைப் பற்றியும், உண்மை நிலையைச் சொன்னால் எங்கே தேசத்துரோகி என்ற பழிச்சொல் வீசப்பட்டுவிடுமோ என்று பலர் அஞ்சுகிறார்கள். தேசியம் என்பதற்காக எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டும் என்று, இல்லாத தேசியத்தைக் கற்பனை செய்துகொண்டு பொல்லாங்குகள் பலவற்றையும் வாய் மூடி ஏற்றுக் கொள்கிறார்கள். தேசிய மகத்துவம் அவர்களை அப்படி ஆட்டிவைக்கிறது.

எத்தர்கள் வீசும்பழிச்சொல்லுக்கு அஞ்சி சீமான்களும் பிரமுகர்களும் அடங்கியிருந்த போதிலும், துணிவுள்ள சிறுவன் உண்மையைச் சொல்லிக் காட்டியதுபோல, இந்திய அரசியலில் தேசத்துரோகம் என்ற பழிச் சொல்லுக்கு அஞ்சி அரசியல் சீமான்களும் பிரமுகர்களும் அடங்கியிருந்தாலும், அரசியல் உலகில் சிறுவர்களாயிருக்கிற நாம் தான் கண்ட உண்மையை எத்தகைய பழியையும் கண்டு அஞ்சாமல் சொல்லிவிட முடிந்தது!

இந்தி தென்னாட்டுக்கு வந்த பொழுது, நாம் எதிர்த்தோம்! "வடநாட்டுக்கு தென்னாடு அடிமைப்பட நேரிடும்" எனக் கூறி எதிர்த்தோம்! இன்றல்ல, இருபதாண்டுகளுக்கு முன்னரே! "இந்தி தேசிய மொழி; தேசிய மொழி வேண்டாமென்பது தேச ஒற்றுமை வேண்டாமென்பதாகும். அது தேசத் துரோகம்!" எனப் பயமுறுத்தினார்கள். அதனையும் மீறி இந்தியை ஏற்றுக் கொள்ள மறுத்தோம்!

"வடக்கு—தெற்கு என்று பேசுவது தேசத்துரோகம்; நல்ல தேசபக்தி உள்ளவர்கள் செய்யமாட்டார்கள்!" எனக் கூறினார்கள். வடக்கு—தெற்கு ஏற்றத்தாழ்வுகளிலுள்ள உண்மைகளை நாம் எடுத்துக் காட்டுகிறோம்.

கதையில் வந்த பிரமுகர்களைப் போல, சீமான்கள் சீமாட்டிகளைப்போல, அகில இந்தியக் கட்சிகள் என்பவைகளெல்லாம் அடங்கி ஒடுங்கி இருந்து விடுகின்றன. தேசத்துரோகம் என்ற பழிச்சொல் வீசப்படுகிற நேரத்தில், அதற்கு அஞ்சி அரசாங்கத்துக்கு ஆதரவாகப் போய் விடுகிறார்கள். அவர்கள் பல உண்மைகளை உணர்ந்தாலும், தேசத்துரோகம் என்ற பழிச் சொல்லுக்கு அஞ்சி பேசாமலிருக்கிறார்கள். "சிறியவர்களாக" "சிறிய கட்சியினராக" இருந்தபோதிலும், நாம்தான் உண்மையை எடுத்துரைக்க முன்வருகிறோம்!

சிறுவன் உண்மையை சொல்லிச் சிரித்ததும், அதுவரை மனதிலே வைத்துவாய் மூடி வைத்திருந்தவர்களும் உண்மையைச் சொல்லி சிரித்துக்கொண்டது போல, "சிறுவர்"களாகிய நாம் கூறியதை பெரியவர்களும் அரசியல் பிரபுக்களும் இப்போது ஒத்துக் கொள்கிறார்கள்.

இந்திப் பிரச்சினையில் இருபதாண்டுகளுக்கு முன் நாம் மட்டும் தனியாக இருந்தோம்! பெரிய நாட்டில் "சின்னஞ்சிறு" கூட்டம் என ஒதுக்கித்தள்ள முயன்றனர்! சிறுவன் சொல்லியதற்குப்பின், மற்றவர்கள் அதை ஆதரித்துநின்றது போல, நாம் சொல்லியதைத் தொடர்ந்து பலர் இன்று சொல்கிறார்கள்! இந்திகூடாது என்பதற்கு நம்மைவிட அவர்கள் காரணங்களைத் தேடித் தேடிப் பிடித்து வந்து காட்டுகிறார்கள்! அரசாங்கத்தின் அலங்கோலத்தைக் கண்டு எள்ளிநகையாடுகிறார்கள்!

வடக்கு தெற்கு என்று பேசுவது முதலில் நாம் சொன்னபொழுது தேசத்துரோகமாக இருந்தது, இப்பொழுது எல்லோராலும் சொல்லலாயிற்று!

அண்மையில் பங்களூர் கூட்டமொன்றில் முன்னாள் மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா அவர்கள் இந்தி அரசாங்க மொழியாக வருவதைக் கண்டித்துப் பின் வருமாறுபேசினார்: **"இந்தி அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் தென்னாட்டிலுள்ளவர்கள் மீது வடநாட்டினர் என்றென்றும் ஆதிக்கம் செலுத்துவார்கள்."**

நாம் சொல்லிய பொழுது தேசத்துரோகம் என ஒதுக்கப்பட்டது. அவர் முன்னாள் முதல் மந்திரி! காங்கிரசுப் பிரபுக்களில் ஒருவர்! இன்று நாம் சொல்லியதை அவர் எதிரொலிக்கிறார்!

சிறுவன் சொல்லியஉண்மை சிறுவன் கிளப்பிய சிரிப்பு பேரலையாகப் பரவிவருகிறது!

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ. 15·00
ஓராண்டு	...	ரூ. 8·00
ஆறுமாதம்	...	ரூ. 4·00
தனி இதழ்	...	16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. யில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ. 18·75
ஓராண்டு	...	ரூ. 10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

தமிழ்ப் பண்புக்கு ஒவ்வா கற்பனைகள்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருத்துக்களையும் முறைகளை ம் நாட்டு மக்களுக்குக் கூறு ன்ற வகையிலே கா. அப்பாதுரையாரவர்களும் மற்றவர் ளும் கழகத்தின் கருத்துக் ளில் கவனம் செலுத்தத் தலைப்பட்டார்கள். இப்போது லர் நம்மைப்பற்றிக் கூறு ன்றபோது பழங்கதை பேசிக் கொண்டிருப்பதால் பய னென்ன என்கின்ற முறை யிலே பேசுகிறார்கள். பழமையைப் பேசுவதன்மூலம் பழங் கால நமது சமுதாயத்தின் ஆக்கத்தையும் அது இன்று ற்று நிற்கும் அவல நிலையையும் எடுத்துக் கூறுகிறோம். பண்டைத் தமிழக வரலாற்றினைக்கூறுகின்றபோது வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் வரலாற்றை மக்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறோம்.

வீழ்ச்சியுற்ற சமுதாயம் எழுச்சிபெறவும் இந்த நாடு விடுதலைபெறவும் பண்டைத் தமிழகம் வாழ்ந்திருந்த காலத்தை நாம் கணக்கிட வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழ் ஆட்சி மொழியாக இருந்தகாலத்திலேதான்- இந்த நாட்டு வாணிகம் சீனத்திற்கும் யவனத்திற்கும் காளகத்திற்கும் கடாரத்திற்கும் சென்று பரவியது—சென்று சிறப்புப் பெற்றது. யவனர் கள் தமிழகத்தின் வீதியிலே திரிந்தார்கள். பழம்பெருமைகளைப் பேசுகிறோமென்றால் அதன்மூலம் வாழ்ந்திருந்த சமூகத்தைப் பார்த்து அது வீழ்ந்துவிட்ட நிலைமையை எடுத்துச் சொல்லி "ஒரு காலத்திலே வாழ்ந்திருந்த நீ வீழ்ந்துவிட்டாய்" என்கின்ற விளக்கங்களை எடுத்துக் கூறவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். பழங்காலத்தைப் பார்க்கச் சொல்லுகிறோம். அத்துடன் பண்டைத் தமிழகத்தின் வாழ்வைப் பார்க்கச் சொல்லுகிறோம். தமிழகத்தின் வாணிகம் சீனத்திலும் பர்மாவிலும் ஈழத்திலும் சென்று பரவியிருந்த வரலாறுகளைக் காண்கிறோம். தமிழகத்தின் சிறப்பைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர் தமிழகத்தின் சிறப்பைக் கூறுகின்றபோது ஆழ்கடலிலே சென்றிருந்த மீனவர்கள் கரையேறத் திசையறியாது தவிக்கின்றபோது, யவனர்களின்மாளிகை மாடத்தின் விளக்கினைக்கண்டு கரை சேர்ந்தார்கள் என்று பாடுகிறார். காவிரிக் கரையிலே நிறுத்தப் பட்டிருந்த வெளிநாட்டு வாணிகர்களின் படகுகள் பற்றிக் கூறுகின்றபோது தொழுவத்திலே கட்டியிருக்கின்ற யானைகள் அசைவதைப் போல அந்தப் படகுகள் அலையின் அசைவால் ஆடிக்கொண்டு நின்றன என்று தமிழ் நாட்டின் வளத்தையும், இங்கே பிற நாட்டினர் வாணிபத்தை அடிப்படையாகக் கொண்டு வந்து தங்கியிருந்த நிலைமைகளையும் விளக்குகிறார்.

அண்மைக்காலத்திலே மதுரை நகருக்குப் பக்கத்திலேயுள்ள சின்னமமனூர் என்ற பகுதியிலே அகழ்ந்தெடுக்கப்பட்ட புதை பொருள்களிலே கிடைத்தசில நாணயங்கள்சீசர் ஆட்சியிலேவழங்கிவந்தபோன் நாணயங்கள் என்று கூறப்படுகிறது. அந்த அளவுக்கு ரோம் நாட்டு நாணயங்களும் பிற நாட்டு நாணயங்களும் நம் நாட்டின் பல்வேறு இடங்களிலுமிருந்து தோண்டியெடுக்கப்பட்டிருக்கின்ற வரலாறுகளை ஆராய்ச்சியாளர்கள் கூறக் கேட்கிறோம். எனவே அத்தகையதொரு சிறப்பான முறையிலே எல்லா வகையிலும் வாழ்வும் வளமும் வளர்ச்சியும் பெற்றுத் திகழ்ந்திருந்தது நமது தாய்த் தமிழ்த் திருநாடு என்பதை அறிகின்றபோது பெருமிதம் கொள்ளுகிறோம். பண்டைக் காலத்தில் ஆண்டிருந்த அரசர்கள் புலவர்களை எவ்வாறு போற்றிப் பாராட்டி வந்தனர் என்பதைப் பார்க்கின்றபோது, பாண்டியன் ஒருவன், மாங்குடி மருதன் போன்ற புலவர்கள் என்னைப் பாடாதொழிக என்று வஞ்சினங் கூறுகின்ற அளவிலே புலவர்களைப் போற்றிவந்த அரசர்களின் வரலாறுகளை நாம் பார்க்கிறோம்.

அரசனே பணிந்துபோற்றத் தகுந்த முரசுகட்டிலின் மேலே ஒரு புலவர் அயர்ந்து தூங்கிவிட, அவ்விதம் தூங்குவது யாரென அறியாமுன்னம் வாளால் வெட்டி யெறியச் சென்ற அரசன், அவர் புலவர் என்பதை அறிந்துகொண்டபின் கவரிகொண்டு விசிறினான் என்கின்றபோது பண்டைய அரசர்கள் புலவர்களை எவ்வாறு போற்றி வந்தார்கள் என்பதை நாம் அறிகிறோம்.

வீரத் தாய்மார்கள் வாழ்ந்திருந்த காட்சிகளைப் புறநானூறு போன்ற நூல்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்தநாட்டு அரசர்களின் வீரம் இமயம்வரை சென்று முட்டியது. இந்த நாட்டு மன்னர்கள் இமயத்திலே சென்று கல்லெடுத்து அதனைக் கங்கையிலே குளிப்பாட்டி கனவிசயர் தங்களைப் பழித்த ஆரிய அரசர்களின் முடித்தலை நெறிய அவர்களின் தலையிலே கல்லேற்றிக் கொண்டுவந்து கண்ணகிக்குச் சிலை நாட்டினான் என்ற வரலாற்றை சேரன் செங்குட்டுவன் வரலாறு நமக்குக் காட்டுகிறது.

சேரன் செங்குட்டுவன் தந்தை, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று இமயம்வரை தன் வெற்றிக்கு வரம்பிட்டான் என்பதை அடையாகக் கொண்டு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனச் சிறந்து விளங்கினான். அவன் இமயம்வரை சென்று தன்னை எதிர்த்தவரை முறியடித்துத் திரும்பியதால்- அவனது வீரம் இமயம்வரை சென்று திகழ்ந்திருந்ததனாலே அவனுக்குப் பெயரே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். கரிகால் சோழன் என்பவன் இரண்டுமுறை சென்று இமயத்திலே இலச்சினை பொறித்துத் திரும்பினான். இரண்டாம்முறையாக தனது தாயாரை அழைத்துச் சென்று அப்போதும் எதிர்த்தோரை முறியடித்து இமயத்தை யடைந்து திரும்பினான் என்பனபோன்ற வீரவரலாறுகளை நாம் பார்க்கிறோம். இந்த நாட்டிடையே படையெடுத்து வந்தவர்கள் முறியடிக்கப்பட்ட வரலாறுகளைக் காண்கிறோம். மௌரியர் படையெடுத்தனர்- அவர்கள் கலிங்கத்தோடு நின்றனர். அசோகனும் நெல்லூரோடு திரும்பிவிட்டான். கோசர்கள் முறியடிக்கப் பட்டனர். வடவர்களும் முறியடிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே இந்த நாட்டுச் சேர சோழர்கள் மிகுந்த வீரத்துடன் தங்கள் புகழைப் பரப்பி வாழ்ந்திருக்கிறார்கள்.

இன்னமும் டெல்லிக்குப் பக்கத்திலே இருக்கின்ற பகுதிகளில் சோழன் படையெடுத்து வென்று திரும்பியதற்கு அடையாளமாக அங்கே விளங்குகின்ற ஒரு கணவாய்க்கு சோழனின் பெயர் கூட்டப் பெற்று "சோளா பாஸ்", என்று அழைக்கப் படுவதை நாம் காண முடிகிறது. புலமையிலேயுங்கூட நமது தமிழகத்திலே திகழ்வது போன்று பிறமொழிகளிலே இல்லையென்பதும் பெண்பாற் புலவர்கள் தமிழ்ப் புலவர்கள் போல பிறமொழிகளிலே இருக்கவில்லை யென்பதும்- ஆங்கிலத்திலே எடுத்துக் கொண்டால் சரோஜினி போன்ற ஒன்றிரண்டு புலவர்களே யல்லாமல்-ஷெல்லி ஷேக்ஸ்பியர்-மில்ட்டன் - ஓட்ஸ்வொர்த்-கோல்டுமிஸ்த் என்பவர்கள் ஆண்களே!

இதுபோலவே ஜெர்மனியிலும்-ஆங்கிலத்திலும், பிரஞ்சு மொழியிலும், சமஸ்கிருதத்திலும்-சீன மொழியிலும் உலக இலக்கிய மொழிகளிலே பெண்பாற் புலவர்கள் அருகிக் காணப்பட்டனர். இல்லையென்றே கூறலாம். தமிழிலே 2000 ஆண்டுகட்கு முன்னரே ஔவையார்: ஏனைய புலவர்களிடையே முதன்மைப் படுத்திப் பார்க்கும்போது ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், ஒக்கூர் மாசாத்திரியார், பொன்முடியார், பேய்மகள் இளவெழனி, காக்கைபாடினிபோன்ற நாற்பதுக்கு மேற்ற புலவர்களைக் காண்கிறோம், இதன்மூலம் கல்வி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது-போற்றப் பட்டிருக்கிறது-சமத்துவம் வழங்கப் பட்டிருக்கிற தென்பதை நீங்கள் அறியலாம்.

இந்த முறையிலே புலவர்கள் தூது செல்கின்ற தன்மையிலேயும் சென்று மன்னர்களிடையே ஒரு நாட்டின் வளத்தையும் நிலைமையினையும் எடுத்துக் காட்டித் திரும்பினார்கள் என்பதை அதியமான் நெடுமானஞ்சியிடம் சென்ற புலவர், வஞ்சப் புகழ்ச்சி யணியின்படி ஒரு நாட்டின் நிறைவையும் ஏனையவற்றையும் விளக்கி வந்ததையும், பண்டைத் தமிழ் மன்னர்கள் புலவர்களுக்குப் பொன்னாடை போர்த்தும், பொற்கிழிதந்தும் போற்றிய அருமையான காட்சிகளையும் நாம் காண்கிறோம்.

இதனைத் தொடர்ந்து அறத்தைப் பற்றிய வரலாறுகளை நாம் ஆராயப் புகுந்தால் "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும் அறவிலை வணிகன் ஆய் அல்லன்" என்று குறிப்பிடுகின்றார். இம்மையிலே ஒருவன் செய்வது மறுமைக்குத் தரும் என்று வாணிபத்தைப் போலப் பயன்கருதி அறம் செய்பவன் ஆய் அல்லன் என்றே குறிப்பிடுகின்றார்.

இதேபோல சங்க இலக்கியங்களைக் காணுந்தோறும் தமிழகம் வாழ்ந்து வளர்ந்து ஓங்கியிருந்த வரலாற்றையும் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த வரலாற்றையும் பார்க்கிறோம். இத்தகைய ஈடுஇணையற்ற சங்க இலக்கியக் காலத்திலிருந்து தமிழக வாழ்வு மிகச் சிறந்த முறையிலே இருந்திருப்பதையறிகிறோம். எனவே வாழ்ந்து உயர்ந்து ஓங்கிய தமிழகம் இடையிலே ஏன் வீழ்ந்து பட்டது என்பதற்கான காரண காரிய விளக்கங்களைத்தான் கா. அப்பாதுரையார் போன்றவர்கள் நமக்கு எடுத்துக்காட்டுகிறார்கள். எல்லாவற்றிலும் புறநானூறு அகநானூறு ஆகியவற்றில் தமிழர்கள் வாழ்வு எத்தகைய நிலையிலே இருந்ததென்பதற்கு புறத்தைவிட அகத்திலே பல சான்றுகள் காணக் கிடைக்கின்றன.

தமிழர்கள் காதல் வாழ்க்கையிலே ஈடுபட்டிருந்த தன்மைகளையும் வீரத்திலே திகழ்ந்தவற்றையும் அவை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

ஆனால் இவ்வளவு சிறப்புற இருந்த இனம் எவ்வாறு வீழ

வளர்ந்த இலக்கியம் வழிதவறிய விந்தை!

ச்சியுற்றது என்பதை எண்ணுகின்றபோதுதான் நாம் சற்றே சிந்திக்க வேண்டியவர்களாகிறோம். சேரன் செங்குட்டுவன் போன்று,பகைமன்னர் அஞ்சும்படி ஆண்ட தமிழினம் பிற்காலத்தில் ஏன் வீழ்ந்துபட்டது என்றால் யானைப்படை குதிரைப்படை— காலாட்படை-தேர்ப்படை-வேல்-வாள் - வில் ஆகியவற்றை நம்பி வாழ்ந்தவர்கள் அக்னியாஸ்திரம் வருணாஸ்திரம்-வாயுவாஸ்திரம் முதலியவற்றை நம்பத் தலைப்பட்டார்கள். போரிலே சிறந்து விளங்கிய வீரமரபினர்கள் அக்னியாஸ்திரத்தை நம்பியா வெற்றிபெற்றார்கள்; கனக விசயரை வென்று அவர்கள் முடித்தலை நெறியக் கல்லேற்றிக்கொண்டுவந்த சேரன் செங்குட்டுவன் வாயுவாஸ்திரத்தை எண்ணியா போர் மேற்கொண்டான் என்கின்ற எண்ணம் போய்-நிலையாமை எண்ணங்கள் புகுத்தப்பட்டன. உலகம் நிலையாமை - வாழ்க்கை நிலையாமை என்கின்ற நினைவு உருவாக்கப்பெற்றது. மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை முதலியவைகளை விட்டுவிடு உலகம் நிலையாது என்கின்ற நினைவு ஏற்படுகின்ற வகையிலே புராண இதிகாசக் கருத்துக்கள் புகுத்தப்பட்டன.

அதுவரையுள்ள தமிழ் வரலாற்றிலே வீரத்தையும் காதலையும் மட்டுமே தங்கள் வாழ்வாகக் கொண்டிருந்த வரலாறுகளைத்தான் நாம் காண முடிகிறது. அகநானூறிலே தமிழர்களின் வாழ்வுபற்றியும் காதல் பற்றியும் வீரம்பற்றியும் பாடியுள்ள பாடல்கள் ஒரே பாட்டு மட்டும் பாடியதாகக் காணப்படுகின்ற பாடல்கள் 140 பாடல்கள் நாம் காணக்கிடைக்கின்றன. இந்த நூற்று நாற்பது புலவர்களும் ஒரே ஒரு பாடல்மட்டும்தான் பாடியிருப்பார்களோ என்றால் எண்ணற்ற பாடல்கள் பாடியிருக்கக்கூடும். ஆனால் நாமெல்லாம் இன்று காணத்தகுந்த அளவிலே யாரோ ஒருவர் தொகுத்துவைத்த காரணத்தினாலேதான் புறநானூறையும் அகநானூறையும் நாம் காண முடிகிறதே தவிர இல்லையெனில் தமிழகம் அதனையும் இழந்த நிலையில்தான் இருந்திருக்கும்.

அகநானூறு காட்டுகின்ற பாடல்களில்: தனக்குப் பிடித்தமான பெண்ணைத்தானே தேர்ந்தெடுத்து மணந்து கொண்ட காட்சிகளும் பிறவும் அற்றை நாள் தமிழ் மக்கள் வாழ்க்கையின் ஏற்றத்தை நமக்குத் தெரிவிக்கின்றன. அதன்பின்னர் போர்—காதல்—வாழ்க்கை என்பவற்றை மறந்து, தவம்—வரம்—என்கின்ற நிலைமை புகுத்தப்பட்ட பிறகுதான், ஏற்றமுற வாழ்ந்திருந்த இனம் வில் வாள்வேல் முதலியவைகளை நம்பியிருந்த நிலையை நீத்து யாகத்திலும் யோகத்திலும் சிந்தனையைச் செலுத்தி அதற்காக உடலையும் உள்ளத்தையும் வருத்தி அறியாமையை நோக்கி அழியத்தலைப்பட்டனர்.

காதல் வாழ்க்கையை மறந்து முப்பத்து முக்கோடி தேவர்களையும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையும் கின்னரர்களையும் கிம்புருடர்களையும் அழைக்கின்ற நிலைமைகள் நிலைத்து அதன் பிறகு கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து வைதிக மதமாச்சரியங்கள்நாட்டிடையே தலைகாட்ட ஆரம்பித்தன அவற்றின் அடிப்படையிலே எழுந்த நூல்கள் மெல்ல மெல்ல பக்தியின் பெயரால் கடவுளின் பெயரால் மக்களிடையே பரப்பப்பட்டு வந்தது. அப்படி வளர்ந்தவைகள் பெரிய புராணம் கந்த புராணம் திருவாசகம் தேவாரம் சைவமதத்தையும்—கம்பராமாயணம் நாலாயிரபிரபந்தம் வைணவ மதத்தையும் சீவகசிந்தாமணி சமண மதத்தையும் மணிமேகலை பௌத்த மதத்தையும், இவ்வாறு ஒவ்வொரு மதத்தை முன்னிட்ட பலவேறு நூல்களும் மதத்தின்கருத்துக்களை மக்களிடையே புகுத்தத் தொடங்கியது. அதன் பிறகு தான் மக்களிடையே காயமேஇது பொய்யடா காற்றடைத்தபையடா ஆகவே இதை நம்பாதேடா என்கின்ற உபதேசங்கள் நிலைபெறச் செய்யப்பட்டன.

இதன் பிறகு துறவி நிலையை விளக்கிப் பட்டனத்தார் பாடலும், தாயுமானவர் பாடல்களும்- உருப்பெறலாயின. அனபாயச் சோழன் என்பவன் சீவகசிந்தாமணி எழுந்த பின்னர் சேக்கிழாரை அழைத்து பெரியபுராணம் பாடும்படி கேட்டுக்கொண்டானென்று அறிகிறோம். இதற்குள் நமது நேரம் நினைப்பு உழைப்பு அறிவு ஆற்றல் ஆகியவைகள் வேறுவேறு வகைகளிலே திருப்பம் பெற்றுவிட்டன, இதற்குப் பின் பாரதியாரின் பாடல்கள் மக்களுக்கு இன்றியமையாத தொரு திருப்பு முனையாக அமைந்தது. அதனையொட்டி பாரதி தாசனும் அவரது வழித்தோன்றல்களும் அந்தப் பணியினை மிகச் சீரும் சிறப்பும் தங்கச் செய்து கொண்டு வருகிறார்கள்! வீரமும் நெறிமுறையும் பரந்து பரவியிருந்த மக்களிடையே புராணக் கருத்துக்களும், மதநம்பிக்கைகளும் புகுவதற்குக் காரணமாயிருந்தது எதுஎன்றால், அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல அவை பெரும்பான்மையும் கலைவடிவிலே புகுத்தப்பட்டது தான் என்பதை இன்றைக்கும் நாம் காணமுடிகிறது.

ராமகாதை நாடக உருவில்-கிருஷ்ணனும் மற்றுஞ்சிலர் வரலாறுகளும் நாடக உருவில்-கோபியராட்டம் நாடகஉருவில் சில சிற்பவடிவங்களில், இவை மிக எளிதாக மக்களிடையே நுழைவதற்கு உறுதுணையாக இருந்தது. அந்தக் கதைகள் செய்யுள் வடிவிலேயும் நாடக அமைப்பிலேயும் சிற்பசித்திர அமைப்புகளிலேயும் புகுத்தப்பட்டதுதான். இன்றும் பல பூங்காக்களின் நடுவே அமைக்கப் படுவது கோபியருடன் ஆடும் கிருஷ்ணனின் சிலை; பல இளவேனிற்கால மண்டபங்களின் நடுவே வைக்கப்பட்டிருப்பது கைலைக்காட்சிபோன்ற அமைப்புகள் தான்.

இந்த நிலையின் காரணமாக மக்கள் தன்னம்பிக்கை இழந்தும், மூடப் பழக்கவழக்கங்களுக்கு உள்ளத்திலே இடங்கொடுத்தும் வாழ்க்கையைப் பற்றிய குறிக்கோள்களை மறந்தனர். அந்தச் சமயத்தில் இவற்றை எடுத்துக் காட்டி விளக்கந் தந்தவர்கள் அப்பாதுரையாரவர்கள் போன்ற புலவர் பெருமக்களாகத்தா னிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் புலவர்களைப் போற்றுகிறது, பாராட்டுகின்றது. பழம் பெருமைகளை எடுத்து விளக்குகிறோம், காவியமாகவும் - உரையாடல்களாகவும் - நாடகங்களாகவும்-திரைப்படத்தின்மூலமும் எடுத்துக் காட்டுகிறோ மென்றால் அது நமது நாட்டைப்பற்றிய எண்ணத்தை - இழந்ததைப் பெற வேண்டுமென்ற எழுச்சியை-வாழ்ந்திருந்த சமுதாயம் வீழ்ந்து பட்டதன் காரண காரிய விளக்கங்களை-மக்களுக்கு ஊட்டுதற்கேயாகும். இத்தகைய நமது முயற்சியைப் பலர் இழித்தும் பழித்தும் ஏசியும் ஏளனம் செய்தும் பலர் தூற்றிடக் காண்கிறோம். அவர்களெல்லாம் நம்மைச் சினிமாக்காரர்களென்றும்-நாடகமாடிகளென்றும் கூறிடக் கேட்கிறோம். அந்தச் சொற்கள் கேட்டு அயர்ந்து விடவில்லை. அவர்கள் கூறுகின்ற கருத்துக்களும் பொருளுண்மைகளும் கலைக்காகவும் கற்பனைக் காகவுமேதான் என்றால் போற்றுகிறோம் அதிலே நமக்கு மறுப்பில்லை. அவர்கள் கூறுகின்ற புராணங்களுக்கும் சங்க இலக்கியங்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும் கருத்துக் கொவ்வாத கற்பனைகளையுமே நாம் மறுக்கிறோம்.

சங்க இலக்கியத்திலே வன்பரணர் என்கின்ற புலவர், ஓரி என்கின்ற வள்ளலைப் பாடப் புகுந்தபோது, அவனது திறமையை விளக்கிக் காட்டுகின்ற பாடல் ஒன்றில்-வல்வில் ஓரி-அவன் பெயருக்கு முன் 'வல்வில்' என்கின்ற அடைமொழியே அவனது ஆற்றலை நம் கருத்திலே படியச் செய்கிறது. வல்வில் வில்லில் மிகவல்லவன் என்றுவலியுறுத்துகிறது. அத்தகைய வல்வில் ஓரி எய்த அம்பு-
'யானையையும்புலியையும் மா...
யும் முள்ளம் பன்றியையும்
கொன்று புற்றிலே நுழையு...
தன்மையிலிருந்த உடும்பின்
மேல் தைத்து நின்றது என்று
கூறும்போது, கற்பனை தான்
என்றாலும் கருத்துக்குச் சரி
யென்று படுகின்றவகையிலே
அம்புபாய்ந்த மிருகங்களின்
தரங்களும்-அம்புசெல்லுகின்ற
முறைமேலிருந்து சரிவாக வரு
வதை அந்த மிருகங்களின்
உருவ அமைப்புகளின் மூல
மும், அம்பின் வேகத்தைக்
குறைக்கின்ற அளவு அவை
களின் தோல் திட்பக் குறை
வின் தரத்தையும் நமக்கு எடுத்
துக் காட்டுகிறது. கற்பனை-ஏற்
றுக் கொள்ளுகிறோம். இ...
நிலையில் ராமன் விட்ட அம்...
'ஏழு மராமரங்களை ஊடுருவி-
ஏழுகடல்களைத் தாண்டி- அவ...
றிலே குளித்து அதன்பிறகு
ராமனின் அம்புறுத்தூணியிலே
வந்து தங்கிற்று' என்கின்ற
கற்பனையை பாராட்ட முடிய...
தில்லை என்பதோடு - அத்த...
கைய கற்பனைகள் கடவுட் தன்
மையையும் உடன் கலந்து
ஊட்டப்படுகிறது என்கின்ற
போதுதான் நமக்கு மறுப்...
ஏற்படுகிறது.

அல்லாமல் பஞ்சதந்திர...
கதையிலிருப்பதைப்போல...
செட்டியார் கடையில் காக்கை
வடை திருடியது - நரி அந்த...
காக்கையைப் புகழ்ந்தது-கா...
கை பாடியது என்று கூறினா...
அதைக்கதைஎன்றமுறையிலே
கேட்கிறோம்-நரி பேசியது-பே...
சும் - காக்கை பாடும்என்றா...
அதனை நம்ப மறுக்கிறோம்...
அத்தகைய கதைகள் நரிபோ...
ன்றவஞ்சகர்கள்சமுதாயத்தில்
உண்டு-நீ காக்கைபோல புகழ்...
சிக்குமயங்கிஏமாறாதேஎன்கின்...
தன்மையிலே ஐந்து வகை...
யான தந்திரங்களில், புகழ்பா...
ஏமாற்றுதலென்கின்ற தன்...
மையை விளக்க இருக்கிறது...
நீ காக்கைபோல் ஏமாறாதே...
நரிபோல் நயவஞ்சகனாக யிரு...
காதே என்னுந் தன்மையி...
அறநெறி யுரைப்பதா யிருப்...
தானால் நமக்கு மறுப்பில்லை
ஆனால் நரி பேசியிருக்கும்-கா...
கை பாடியிருக்கும் என்று நம்...
மறுக்கிறோம்.

குமரகுருபரர் பாடிய மீனா...
சியமமை பிள்ளைத் தமிழி...
அவர் தமிழுக்குத் தந்திரு...
கின்ற ஏற்றங்களாக "தொடு...
குங் கடவுட் பழம் பாட...
தொடையின் பயன்" - "நறை
பழுத்த துறைந் தீந்தமிழி...
ஒழுகு நறுஞ்சுவை" - தானி...
புறுவது உலகின்புறக் கா...
கின்ற உயர் குணம் படை...
தோனொருவனின் உள்ள...
அழகிய உள்ளம். அத்தகை...
வன் உள்ளத்தில் அழகு ஒ...
எழுதிப் பார்த்திருக்கும் உ...
ரோவியம்-இனிமையை உண்...
மெய்மறந்து ஒன்றி விடுமின்...
தன்மை வந்தெய்துதலை...
"மது" வென்றார். மதுவை...

எடுத்து என் வாய் மடுக்கின்ருய் மலையத்து வசன் பெற்ற மகளே - பெருவாழ்வே" யென்ருல் இதிலேயுள்ள கற்பனையையோ சொல்லழகையோ நாம் மறுக்கவில்லை. கடவுள் காட்சியை தெய்விகத் தன்மைகளை வலியுறுத்துகின்ற தன்மையை-நாம் மறுக்கிருேம். மற்ருெரு பாடலில், மதுரைநகரின் வளத்தைப் பற்றிக் கூறவந்த இடத்தில்: "வயலிலேயுள்ள வாளை மீன் துள்ளுகின்ற அளவு நீர் வளம் என்பதோடு நிறுத்தி விடாமல், வயலிலிருந்த மீன் துள்ளித்தென்னையில் உள்ள பாளைகளை உதிர்த்து - மேகமண்டலங்களிலே விளையாடி-உடுக் கூட்டங்களை உழற்றி - சந்திரனில் புகுந்து அதிலுள்ள அமுதகலசத்தையுடைத்து ஒழுக விட்டு, அதன் பின் அண்ட முகட்டிலே சென்று முட்டி, அதற்கப்பாலுள்ள பெரும் புறக் கடலிலே சென்று அதிலிருக்கின்ற மூறிச் சுருவுடன் விளையாடிக் கொண்டிருப்பதை ஒப்ப மறுக்கிருேம். விஞ்ஞான ஆராச்சியின் பயனைச் செல்லுகின்ற ராக்கெட்டுகள் கூட நேரே புறப்பட்டு-புறப்பட்ட இடத்திற்கு வருவது பற்றிய செய்திகளைக் காணும்போது அம்பு பயணப் பட்ட கதை நமது நம்பிக்கைக்கு இடமளிக்கவில்லை. "அஞ்சிலே யொன்று பெற்ருன்" என்கின்ற பாடல் சொற் செறிவும் பொருளாழமும் கொண்டிருக்கிறது மறுக்கவில்லை; நில நீர் வெளி காற்று நெருப்பு எனும் ஐம்புலன் களையும் இணையவைத்து அவற்றின் சூழலையே நிகழ்ச்சிப் படமாகக் காட்டியிருக்கின்ற பாட்டில் கம்பரது கற்பனையிலே நமக்கு மறுப்பில்லை தான்.

"சொல்லொக்குங்கடிய வேகம்" என்ற பாட்டிலே அம்பு, சொல் போன்று 'சொல்லொக்கும்' என்கின்ருர், அவ்வம்பு கடிய வேகத்துடன் சென்று ஊடுருவிச் சென்றுவிடுகிறதென்பதைக் கூறவந்த கம்பர் 'கல்லாப்புல்லர்க்குச் சொன்ன பொருள் விளக்கம், ஒரு செவி வழி புகுந்து-மறு செவி வழி செல்வது போன்று சென்றது' என விளக்குகின்ற முறை கருத்தையும் - அதன் வழி கல்லார் தம் நிலையையும் எடுத்துக் காட்டுவதாயமைந்திருக்கிற தென்ருல் அதனை நாம மறுப்பவர்களில்லை "தண்டலை மயில்களாட" எனத் தொடங்கும் செய்யுளில் ஆடுகின்ற மயிலைப் பெண்ணாக்கி- நிலையலைகள் திரையாகவும்-முகில் கூட்டங்கள் முழவென முழங்கவும், வண்டுகள் மகரயாழென முரலவும்-தாமரை விளக்கேந்தி நிற்பதாகவும்-குவளைக்கண் விழித்து நோக்குவதாலும் இயற்கையோடு இணைந்து - இயற்கையைத் துணையாக்கி மருதநிலக் காட்சியைச் சித்திரிக்கும் திறமையிலே நமக்கு வேறுபாடில்லை. "கண்ணுறு நலத்தினுள்" என்ற பாடலில் நினைத்தற்கு இயலாத அத்துணை சிறப் பழகுவாய்க்கப் பெற்றவளே, முன்னைப் பாட்டினிலே 'கல்லும் புல்லும கண்டுருகப் பெண் கனி நின்ருள்' என்று கூறிய தற்கொப்ப நின்ற அணங்கை, கண்ணொடு கண்ணை கவ்வி, ஒன்றையொன்று உண்டன என்றும், உணர்வு ஒன்றிய தென்றும் எடுத்துக் காட்டி அண்ணலும் நோக்கினன்-அவளும் நோக்கினள் என்று கூறுகின்ற பாடல்களில் சொல்லழகு அணியழகிலே நமக்கு மாறுபாடில்லை-

"தோள் கண்டார்
தோளே கண்டார்"

என்னும் பாடலில் ராமனின் அழகு நிறைவையும்-அதைக் கண்டிருந்தோர் ஒன்றைக் கண்டு மற்ருென்றைக் காணத் தலைப்படாத வண்ணம் கண்டுகொண்டே இருந்தனர் என்பதனை 'தேற்று ஏகார விதியின் படி' "தோளே" "தாளே" என்று கூறுகின்ருர். அந்தக் கவிதை நயத்தை அமைப்பு முறையை நாம் மறுக்கவில்லை.

போனபடைத் தலை வீரர்
தமக்கிறை போதா இச்
சேனை கிடக்கிடு தேவர்
வரின் சிலை மாமேகம்
சோனை படக் குடற் சூரை
படச் சுடர் வாளோடும்
தானை படத் தனி யானை
படத் திரள் சாயேனே!

என அமைந்துள்ள பாடல், படைகள் நடந்து செல்லுகின்ற காட்சியையும் வீரர்களின் மிடுக்கு நடையையும் செய்யுளைப் படிக்கின்றபோதே காண்கின்ற வகையில் யாக்கப் பட்டிருப்பதும்'

Canon to the right, Canon to the left
Canon in front of them.

என்ற ஆங்கிலப் பாடலை யொத்திருக்கின்றதென்பதிலே நமக்குப் பெருமை தான்-

"விற்பெருந் தடந்தோளவீர"

என்கின்ற பாடலில் சீதையைக் காண வில்லை; இற்பிறப்பு-இரும்பொறை (சிறந்த பொறுமை) கற்பென்ற பெயரே அங்கு இருக்கக் கண்டேன் என்று கூறி பண்பாட்டு நிறைவை விளக்கும் நயப் பாட்டிலே நமக்கு மறுப்பில்லை.

"மையறு மலரின் நீங்கி" எனத் தொடங்கும் பாடலில், தன்னகத்தே சீதை இருக்கின்ருள் என்பதைத் தெரிவித்து, 'ஒல்லை வா' விரைந்து வா என்று அழைப்பது போன்றிருந்தது என்கின்ற பாடலில் தற்குறிப்பு ஏற்ற அணியாக செழுமணிக் கொடிகள் அழைத்தது என்று கூறுகின்ற காவியநயத்திலே எங்களுக்கு மறுப்பில்லை—இராமாயணம் ஏனைய இதிகாச புராணங்களிலுள்ள சொல்லாழம் பொருளாழம் உவமையழகு அணியழகு ஆகியவற்றிலே நமக்கு மறுப்பு இருந்ததில்லை. ஆனல் அவற்றைக் கடவுட் காதையாக கொள்ளவும் அதில் பொதிந்துள்ள தெய்வீகத்தன்மை அருட் செயல் என்பவற்றையே பகுத்தறிவியக்கத்தார் மறுக்கிருர்கள்.

இதனை அடிப்படையாகக் கொண்டுதான் மக்களிடையே பரப்பப்பட்டுவிட்ட மதநம்பிக்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும்—தன் நம்பிக்கை யற்ற நிலையினையும் போக்கவே அப்பாதுரையார் போன்றவர்களும் மற்றவர்களும் கலைத் துறையின் மூலமும் மற்ற வழிகளிலும் தங்கள் கருத்தை மக்களுக்கு எடுத்துக் கூறிவருகிருர்கள். புராணங்களையோ இதிகாசங்களையோ எடுத்துக் கூறுவதென்ருல் விளக்கம் தருவதென்ருல் நாம் கூறுகின்ற அளவு புராணிகர்களும் வைதீகர்களுங்கூட நம்மளவு அத்துணை விளக்கம் தர இயலாதென்பதற்காகவே கம்பராமாயணத்தில் உள்ள கருத்துக்களையும் பிறவற்றையும் விளக்கிக் கூறினேன்.

இவர்களுக்கு என்ன தெரியும் பேசத்தெரிந்து விட்டால் மட்டும்போதுமா? பேசத்தான் தெரியவேண்டும் என்பதே, "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிறைந்தினிது சொலல் வல்லார்ப் பெறின்" என்று கூறுகின்ருர் வள்ளுவர். இனிது நிறந்து யார்க்கும் விளக்கம் தருகின்ற வகையிலே சொல்லுகின்ற ஆற்றலுடையோரிருப்பின் இந்த ஞாலம் விரைந்து தொழில் கேட்கும் என்று தெரிவிக்கின்ருர். எனக்கென்ன கட்டளையிடுகிருய், நான் உடனே செயலாற்றுகின்றேன் என்று விரைந்து தொழில் கேட்குமென்று கூறுகின்ருர்.

அறிஞர் அண்ணு அவர்களின் சுட்டு விரலசைவுக்கு மாணவர்களும் வீரர்களும் செயலாற்றக் காத்திருக்கின்றனரென்ருல் அது நாம் சொல்லுகின்ற தன்மையும், அதற்குறிய திறமைபடைத்திருப்பதுமே காரணமாகும். நாட்டிலே இருக்கின்ற பேச்சாளர்களிலே நூற்றுக்கு எழுபதுபேர் திராவிட முன்னேற்றக்கழகத்தினர் தான். திராவிட முன்னேற்றக் கழகம் பேச்சு, எழுத்து, நாடகம், திரைப்படம் ஆகிய கலைகளின் மூலம் நாட்டுப் பற்றையும் விடுதலைவேட்கையையும் மக்களுக்கு ஊட்டி வருகிறது,

நம்மை சினிமா கட்சிக்காரர்கள் என்று கூறிவருகின்றனர். பலர் என்ருல், அதன் மூலம் நல்ல பல கருத்துக்களை நாட்டிடையே பரப்பி வருகிருேமென்பதுதான் பொருள். அறிஞரண்ணு அவர்கள் "வேலைக்காரி" படத்திலே வருகின்ற "கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு" என்கின்ற வசனத்தை எழுதுவதற்காகச் செலவிட்டிருக்கும் நேரம் இரண்டு நிமிடங்களுக்கு மேல் ஆகியிருக்காது. ஆனல் அது நாட்டிலே பல தியேட்டர்களில் பல இலட்சக்கணக்கான மக்களின் கருத்திலே கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு என்கின்ற உண்மையைப் புகுத்தியிருக்கும். ஆகவே பிறர் நம்மைத் தூற்றுவதற்காக நாம் கவலைப்படுவதில்லை. மாருக இன்றைக்குத் திரைக்கதை வசனம் எழுதும் பேனுக்கள் பத்துக்கு நாலாக இருப்பதைவிட்டு மீதி ஆறும் முன்னேற்றக்கழகமாக ஆகும் காலம் எக்காலம் என்றுதான் எண்ணுகிருேமே தவிர வெட்கமோ துக்கமோ படுவதில்லை! இன்றைக்குள்ள நடிகர்களில் வருங்காலப் பட்டியலிலே இருப்பவர்களில் பெரும்பாலோர் முன்னேற்றக் கழகக் கருத்தைக் கொண்டவர்கள். அதைப்போல ஓவியர்களும் இசைவல்லுனர்களும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகின்றனர்.

ஓவியர் ரவிவர்மா வாழ்ந்த காலத்தில் தான் லெட்சுமியும சரசுவதியும் நல்ல உருப் பெற்றனர். ஆனல் இன்று செயலாற்றிக்கொண்டு வரும் ஓவியர்கள், கரிகாற் சோழன் சேரன் செங்குட்டுவன் வரலாறுகளையும் ராசேந்திரச் சோழன் - ஜெயங்கொண்ட-கடாரம் வென்ற - கங்கை கொண்ட சோழர்களின் வரலாறுகளை வீரம் விளங்க-கலைத் திறம் துலங்க-ஆற்றல் மிளிர-இயற்கை இணைய தீட்டிக் காட்டுகின்ற திறம் படைத்தோராயிருக்கின்ருர்கள்.

எனவே வருங்காலத்தில் மக்களிடையே கருத்து வளரவும்-பண்பாடு நிறையவும் - சமுதாயம் சிறக்கவும் பாடுபட்டு வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் இலக்கியத் துறையிலேயும் தனது கருத்தைச் செலுத்தி அதிலுள்ள உண்மைகளை மக்கட்குத் தெரியப் படுத்துவதன் காரணமாகவே புலவர்களைப் போற்றியும் பாராட்டியும் பொன்னுடை போர்த்தும்-பொற் கிழிதந்தும பாராட்டுகள் வழங்கியும்-செயலாற்றி வருகிறது ஆகவே ஈடு இணையற்ற திராவிடத்தின தனியாட்சி காணவும், அரசியல் பொருளாதார சமுதாய மேம்பாடுற்ற விடுதலை இன்பத் திராவிடம் காணவும் சக்திக்கேற்ற உழைப்பு - தேவைக்கேற்ற வசதி என்கின்ற பொருளாதார சமத்துவம் நிலவவும், ஏழை-பணக்காரன், முதலாளி-தொழிலாளி, பணக்காரன் பஞ்சை ஆண்டான்-அடிமை, என்கின்ற வேறுபாடுகள் நீங்கி மனிதன் - மனிதனுக வாழ வேண்டும். மனிதன் புழுவாக மதிக்கப் படுகின்ற தன்மை மாற்றப் படவேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்துடன் நீங்களனைவரும் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதன் அடிப்படையிலே பன்மொழிப் புலவர் அவர்களின் பொன்விழா நிதிக்கு உதவ நீங்கள் செய்துள்ள பணிகள் சிறக்க என்று பாராட்டி, வட நாட்டு பாசிச ஏகாதிபத்திய ஆட்சி அகன்று சுதந்திர சோஷலிச திராவிடக் கூட்டாட்சி அமையவேண்டும் என்று கூறிக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன் வணக்கம்!

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. வர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண்: 55697)